NOT FOR COMMERCIAL PURPOSE
படிப்பதற்கு மட்டும். அச்சடித்து விற்பதற்கு அல்ல.

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# عقائد أهل السنة
# و
# الكلمة الطيبة

## معناها | فضائلها | شرحها | شروطها

# அஹ்லுஸ் ஸுன்னா கொள்கைகள்

ஆசிரியர்: அஷ்ஷைக் அப்துர் ரஹ்மான் இப்னு நாசிர் அஸ்ஸஅதி رحمه الله
(பிறப்பு கி.பி. 1889 இறப்பு கி.பி 1956)

# தூய திரு கலிமா

## பொருள் | சிறப்புகள் | விளக்கம் | ருக்னுகள் | நிபந்தனைகள்

கோர்வை:
உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ் ஸலாம்

# பொருளடக்கம்

## அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கைகள்

1. பதிப்பாசிரியர் முன்னுரை 4

2. அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கைகள் 6

3. தவ்ஹீதுடைய சிறப்புகள் 18

## தூய திரு கலிமா

4. முன்னுரை 23

5. லா இலாஹ இல்லல்லாஹ் உடைய சிறப்புகள் 27

6. லா இலாஹ இல்லல்லாஹ் உடைய விளக்கம் 29

7. முஹம்மதுர் ரசூலுல்லாஹ் உடைய பொருள் மற்றும் விளக்கம் 34

8. லா இலாஹ இல்லல்லாஹ் உடைய ருக்னுகள் 42

9. தூய திரு கலிமா உடைய ஷர்த்துகள் - நிபந்தனைகள் 46

10. ஈமானின் சாட்சியத்தை முறிப்பவை 62

11. சாட்சியத்தை முறிக்கின்ற செயல்களில் அதிகம் நிகழ்பவை 63

# பதிப்பாசிரியர் முன்னுரை

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்..

## ஆசிரியர் அறிமுகம்

இந்த சிறிய தொகுப்பின் ஆசிரியர் அஷ் ஷைக் அல் அல்லாமா அபூ அப்தில்லாஹ் அப்துர் ரஹ்மான் இப்னு நாசிர் இப்னு அப்தில்லாஹ் இப்னு நாசிர் அஸ்ஸஅதி ஆவார். இவர் பனூ தமீம் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் சவூதி அரேபியாவில் உள்ள “அல்கசீம்” மாகாணத்தில் ‘உனைஸா’ என்ற ஊரில் கி.பி. 1889ல் பிறந்து கி.பி 1956ல் இறந்தார்கள்.

ஆசிரியர் அவர்கள் கல்வியிலும் ஆய்விலும் குர்ஆன் விரிவுரையிலும் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள். பல நூல்களை எழுதி இருக்கின்றார்கள். ஷைக் இப்னு பாஸ், ஷைக் உஸைமீன் போன்ற அறிஞர்கள் இவர்களின் மாணவர்கள் ஆவர்.

அல்லாஹ்வின் கருணையும் அருளும் அன்னார் மீது நிலவட்டும். அவர்களின் மண்ணறையை விசாலமாகவும் பிரகாசமாகவும் அல்லாஹ் ஆக்குவானாக! ஆமீன்!

### நூல் அறிமுகம்

அவர்கள் தொகுத்ததுதான் இந்த சிறிய தொகுப்பு. அஹ்லுஸ் ஸுன்னாவின் கொள்கைகளையும் பண்புகளையும் தவ்ஹீதின் சிறப்புகளையும் மிக அழகாக, சுருக்கமாக இந்த தொகுப்பில் அவர்கள் நமக்கு வழங்கி இருக்கிறார்கள்.

இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ﷺ அவர்களின்

‘கிதாபுத் தவ்ஹீத்’ நூலுக்கு ஷைக் ஸஅதி ﷺ அவர்கள் ‘அல் கவ்லுஸ் ஸதீத்’ என்ற பெயரில் ஒரு விரிவுரை நூல் எழுதியுள்ளார்கள். அந்த நூலின் முன்னுரையில் இந்த தொகுப்பை இணைத்துள்ளார்கள். அதிலிருந்து இந்த தொகுப்பு எடுக்கப்பட்டு, நன்மையை நாடி சிறு நூலாக வெளியிடப்படுகின்றது. அல்லாஹ் இந்த வெளியீட்டை பொருந்திக் கொள்வானாக! அல்லாஹ் இதை ஏற்றுக் கொள்வானாக! ஆமீன்.

கல்வி கற்கின்ற தொடக்க நிலை மாணவர்கள் இதைப் படிப்பது நிச்சயம் அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். கொள்கை கல்வியை போதிக்கின்ற ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு இந்த சிறிய கையேட்டை விளக்கமாக போதித்தால் இன் ஷா அல்லாஹ் கண்டிப்பாக அது அவர்களுக்கு கொள்கை விஷயத்தில் நல்ல தெளிவையும் உறுதியையும் கொடுக்கும்.

அல்லாஹ் இந்த தொகுப்பின் மூலம் எனக்கும் இதை வாசிக்கின்ற எல்லா மக்களுக்கும் உறுதியான ஈமானையும் உண்மையான தவ்ஹீதையும் வழங்குவானாக! இதன் வாயிலாகவும் தாருல் ஹுதாவின் மற்ற நூல்கள் வாயிலாகவும் எல்லோரும் பலன் பெற உதவுவானாக! ஆமீன்!!

**கவனிக்க...!**

ஆசிரியர் அவர்கள் இந்நூலில் அஹ்லுஸ் ஸுன்னா என்று குறிப்பிடுவார்கள். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்பதைத்தான் சுருக்கமாக அஹ்லுஸ் ஸுன்னா என்று கூறுவார்கள்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்றால் நபி ﷺ அவர்களின் வழிமுறைகளையும் நபித்தோழர்களையும் பின்பற்றுகிறவர்கள் என்று பொருளாகும்.

-------------------

# அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கைகள்

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! நாம் அவனைப் புகழ்கின்றோம்; அவனிடம் உதவி தேடுகின்றோம்; அவனிடம் மன்னிப்புக் கோருகிறோம்; அவன் பக்கமே மீளுகிறோம்; நமது நஃப்ஸ்களின் தீங்குகளை விட்டும் நமது செயல்களின் தீமைகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம். யாரை அல்லாஹ் நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் அறவே இல்லை. யாரை அவன் வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் அறவே இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை அறவே இல்லை என்று சாட்சி கூறுகின்றேன். மேலும், நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனுடைய அடியாராகவும் அவனுடைய தூதராகவும் இருக்கின்றார் என்று சாட்சி கூறுகின்றேன்.

இந்த சில பக்கங்களில் அஹ்லுஸ் ஸுன்னா உடைய அடிப்படையான கொள்கைகளையும் இன்னும் அடிப்படை சார்ந்துள்ள முக்கியமான கொள்கைகளையும் சுருக்கமாக முன்வைக்க விரும்புகிறேன்.

அல்லாஹ்விடம் உதவி தேடியவனாக கூறுகிறேன்:

அவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் மறுமை நாளையும் விதியை, அதில் இருக்கின்ற நன்மையையும் தீமையையும் நம்பிக்கை கொள்வார்கள்.

அல்லாஹ்தான் **رب** ரப்பு - படைத்து பரிபாலிப்பவன், **إله** இலாஹ் - வணக்கத்திற்குரியவன், எல்லாப் பரிபூரண தன்மைகளுக்கும் தனியாக சொந்தக்காரன் என்று சாட்சி கூறுவார்கள். ஆகவே, அவனை மட்டும் வணங்குவார்கள். வழிபாடுகள் அனைத்தையும் அவனுக்கு மட்டும் கலப்பற்ற முறையில் செய்வார்கள்.

நிச்சயமாக அல்லாஹ்தான் படைப்பாளன், உருவாக்குபவன், உருவமைப்பவன், உணவளிப்பவன், கொடுப்பவன், தடுப்பவன், எல்லாக் காரியங்களையும் திட்டமிட்டு நிர்வகிப்பவன் என்று அவர்கள் கூறுவார்கள்.

நிச்சயமாக அவன்தான் **مَأْلُوهٌ** நாம் பயந்து ஒதுங்குவதற்கும், **مَعْبُودٌ** வணங்குவதற்கும், **مُوَحَّدٌ** ஒருமைப்படுத்துவதற்கும், **مَقْصُودٌ** நாம் நன்மைகளை நாடி அமல்கள் செய்வதற்கும் தகுதியானவன். நிச்சயமாக அவன்தான் முதலாமவன், அவனுக்கு முன்பு யாரும் இல்லை. அவன்தான் இறுதியானவன், அவனுக்குப் பின்பு யாரும் இல்லை. அவன் வெளிப்படையானவன், அவனுக்கு மேலாக எதுவும் இல்லை. அவன் மறைந்தவன், அவனைவிட மறைந்தது எதுவும் இல்லை.

நிச்சயமாக அவன் மிக உயர்ந்தவன், எல்லா வகையிலும் அவன் மிக மிக உயர்ந்தவன். அவனது உள்ளமையாலும் அவனது கண்ணியத்தாலும் அடக்கி ஆளுகின்ற வல்லமையாலும் அவன் மிக மிக உயர்ந்தவன்.

நிச்சயமாக அவன் “அர்ஷ்”ன் மீது தனது கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் தகுதியான வகையில் உயர்ந்திருக்கின்றான். அவன் எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்திருப்பதுடன், அனைத்திற்கும் மேலாக இருப்பதுடன் அவனது அறிவு வெளிப்படையான பொருள்கள், மறைந்திருக்கின்ற பொருள்கள், மேல் உலகம், கீழ் உலகம் என அனைத்தையும் சூழ்ந்திருக்கின்றது. அவன் தனது அடியார்களுடன் அவனுடைய அறிவால் சூழ்ந்து இருக்கின்றான். அவர்களின் நிலைகள் அனைத்தையும் அறிகின்றான். அவன் மிக சமீபமானவன், பதிலளிப்பவன் ஆவான்.

அவன் தனது உள்ளமையில் படைப்புகள் அனைத்தையும் விட்டு முற்றிலும் தேவை அற்றவன். எல்லோரும் தாம் உருவாக்கப்படுவதிலும் தமக்கு தேவையான பொருள்கள் உருவாக்கப்படுவதிலும் அவன் பக்கமே எல்லா நேரங்களிலும் தேவை உள்ளவர்கள். கண் சிமிட்டும் நேரம் கூட அவனை விட்டும் யாரும் தேவையற்றவராக ஆகமுடியாது. அவன் மகா இரக்கம் உள்ளவன், மகா கருணை உள்ளவன். அடியார்களுக்கு தேவையான உலகம் சார்ந்த, மார்க்கம் சார்ந்த எல்லா அருட் கொடைகளும் அல்லாஹ்விடம் இருந்துதான் கிடைக்கின்றன. அல்லாஹ்வின் அருள் இல்லாமல் ஆபத்துகளை தடுக்கவும் முடியாது. அவன்தான் அருட்கொடைகளை வழங்குபவன், ஆபத்துகளை தடுப்பவன்.

இரவின் இறுதியில் கீழ் வானத்திற்கு அவன் இறங்கி வந்து அடியார்களை தன்னிடம் பிரார்த்திக்கக் கூறுவதும் அவனது கருணையாகும். என் அடியார்களைப் பற்றி என்னைத் தவிர யார் விசாரிப்பார்? என்னை அழைப்பவர் யார்? நான்

அவருக்கு பதிலளிப்பேன். என்னிடம் கேட்பவர் யார்? நான் அவருக்கு கொடுப்பேன். என்னிடம் மன்னிப்புக் கோருபவர் யார்? நான் அவரை மன்னிக்கின்றேன். இவ்வாறு அதிகாலை உதயமாகின்றவரை அவன் அடியார்களை நோக்கி கேட்கிறான். அவன் நாடியவிதத்தில் அவன் இறங்குகின்றான். அவன் நாடியதை அவன் செய்கின்றான். அவனைப் போன்று யாரும் இல்லை, எதுவும் இல்லை. அவன் நன்கு செவியுறுபவன், உற்று நோக்குபவன்.

மேலும் அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கை கொள்கிறார்கள், "அவன்தான் மிக்க ஞானமுடையவன்; அவன் எதை மார்க்கமாக ஆக்கி இருக்கின்றானோ அதிலும் எதை விதியில் எழுதி இருக்கின்றானோ அதிலும் அவன் மிகப் பெரிய ஞானத்தின் அடிப்படையிலும் உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையிலும் அவன் செய்திருக்கின்றான். அவன் எதையும் வீணாக படைக்க வில்லை. மார்க்க சட்டங்கள் அனைத்தையும் பல நன்மைகளின் அடிப்படையிலும் ஞானத்தின் அடிப்படையிலும்தான் அவன் அமைத்திருக்கின்றான்."

"மேலும், அவன் அடியார்களின் பிழைகளை பொருப்பவன், மன்னிப்பவன், திருந்திவருபவர்களை ஏற்றுக்கொள்கின்றான். பாவங்களை மன்னிக்கின்றான், தவறிழைத்தவர் திருந்தி அவன் பக்கம் திரும்பி பாவமன்னிப்புக் கேட்டுவிட்டால் எவ்வளவு பெரிய பாவமாக இருந்தாலும் அவன் அதை மன்னித்து விடுவான்."

"மேலும், அவன்தான் நன்றி அறிபவன், சிறிய அமலையும் ஏற்று அதற்கும் நன்றி அறிந்து நன்மை அளிக்கின்றான். நன்றி செலுத்துபவர்களுக்கு தனது அருளிலிருந்து மேலும் அதிகமாக வழங்குகிறான்."

அல்லாஹ் தன்னை எப்படி எல்லாம் வர்ணித்தானோ, அவனுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனை எப்படி எல்லாம் வர்ணித்தார்களோ அப்படித்தான் அஹ்லுஸ் ஸுன்னாவும் வர்ணிப்பார்கள்.

அவனுடைய தாத் சார்ந்த - உள்ளமை சார்ந்த தன்மைகளில் சிலவற்றுக்கு உதாரணம்: பரிபூரணமான உயிரோடு இருத்தல், செவியுறுதல், உற்று நோக்குதல், முழுமையான ஆற்றல், கண்ணியம், பெருமை, சிறப்பு, கம்பீரம், அழகு, புகழ்.

அவனுடைய நாட்டம் மற்றும் ஆற்றலுடன் தொடர்புடைய அவனுடைய செயல்சார்ந்த தன்மைகளில் சிலவற்றுக்கு உதாரணம்: கருணை, பொருத்தம், மகிழ்ச்சி, கோபம், பேசுவது.

அவன் எப்போது நாடுகிறானோ, எப்படி நாடுகிறானோ அவ்வாறு அவன் பேசுவான். அவனது வார்த்தைகள் தீர்ந்து விடாது; அழிந்து விடாது.

நிச்சயமாக குர்ஆன் அல்லாஹ் உடைய கலாம் -பேச்சாகும். அது படைக்கப்பட்டதல்ல. அவனிடமிருந்து அது வந்தது. அவன் பக்கமே அது திரும்பிவிடும்.

அவன் எதை நாடுகிறானோ அதைச் செய்வான். இது அவனது நிரந்தரமான தன்மையாகும். அவன் நாடியதை பேசுகின்றான். தனது அடியார்கள் மீது விதி சார்ந்த சட்டங்களையும் மார்க்கம் சார்ந்த சட்டங்களையும் சட்டமாக்குகின்றான். செயலுக்கு ஏற்ப கூலியை அவன் விதித்துள்ளான். அவன்தான் தீர்ப்பளிப்பவன், உரிமையாளன், எஜமானன். அவனைத் தவிர அனைவரும் அடிமைகள், தீர்ப்பளிக்கப்படுபவர்கள். அடியார்கள் யாரும் அவனது ஆட்சியை விட்டும் அவனது தீர்ப்பை விட்டும் வெளியேறிவிட முடியாது.

அல்குர்ஆனிலும் அதிகமான நபிமொழிகளிலும் வந்துள்ளபடி, நிச்சயமாக முஃமின்கள் மறுமையில் தங்கள் ரப்பை - இரட்சகனை கண்கூடாக, வெளிப்படையாக பார்ப்பார்கள் என்பதையும் அவனைப் பார்க்கின்ற பாக்கியமும் அவனுடைய பொருத்தத்தை பெறுவதும் சொர்க்க இன்பங்களில் மிகப் பெரியதாகும் என்று அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கை கொள்கிறார்கள்.

ஈமான்- உண்மையான இறை நம்பிக்கை இல்லாமல், அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்காமல் யார் மரணிப்பாரோ அவர் நரகத்தில் நிரந்தரமாக என்றென்றும் தங்கிவிடுவார். பெரும் பாவம் செய்தவர்கள் பாவமன்னிப்புக் கேட்காமல் இருந்து விட்டால், அவர்களிடம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்ற அளவு நன்மைகளும் இல்லை என்றால், நல்லவர்களின் சிபாரிசும் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் நரகத்தில் தண்டிக்கப் படுவார்கள். ஆனால், நிரந்தரமாக அல்ல. தண்டனைக்குப் பிறகு நரகத்தில் இருந்து கண்டிப்பாக வெளியேறுவார்கள். தனது உள்ளத்தில் கடுகளவு ஈமான்- இறை நம்பிக்கை உள்ளவரும் நரகத்தில் நிரந்தரமாக தங்க மாட்டார்.

ஈமான் என்பது உள்ளத்தின் நம்பிக்கைகளையும் அதன் அமல்களையும் உறுப்புகளின் அமல்களையும் நாவின் பேச்சுகளையும் உள்ளடக்கியதாகும். யார் மிகப் பூரணமான முறையில் அனைத்து அமல்களையும் நிறைவேற்றுவாரோ அவர் உண்மையான முஃமின் - நம்பிக்கையாளர் ஆவார். அவர் நற்கூலிக்கு தகுதி பெறுவார்; தண்டனையைவிட்டு பாதுகாப்பு பெறுவார். யார் அமல்களில் எந்த அளவு குறைவு செய்வாரோ அந்த அளவு அவருடைய ஈமான் குறையும். ஆகவே, ஈமான் நன்மைகளை செய்வதால் அதிகரிக்கும்; பாவங்களை செய்வதால் குறையும்.

பலன் தரக்கூடிய நல்ல காரியங்களில் முயற்சி செய்வது, உழைப்பது அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைகளில் உள்ளதாகும். அந்தக் காரியம் மார்க்கம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் அல்லது உலகம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி. நற்பலன் அளிக்கக்கூடிய காரியங்களில் அவர்கள் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். அல்லாஹ்விடம் உதவி தேடுவார்கள். தங்களின் எல்லா செயல்பாடுகளிலும் 'இக்லாஸ்' மனத்தூய்மையை உறுதியாகப் பேணுவார்கள். அல்லாஹ்விற்காக என்று கலப்பற்ற மனதுடன் அமல் செய்வதிலும் மார்க்கத்தை பின்பற்றுவதிலும் முஃமின்களுக்கு நன்மையை நாடுவதிலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பின்பற்றுவார்கள்.

மேலும், நிச்சயமாக முஹம்மது ﷺ அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார் என்று அவர்கள் சாட்சி கூறுவார்கள். அவர்களை நேர்வழியைக் கொண்டும் சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அல்லாஹ் தூதராக அனுப்பினான். அவர்களின் மார்க்கத்தை எல்லா மார்க்கங்களை விட மேலோங்கச் செய்வான். நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முஃமின்களுக்கு அவர்களின் உயிர்களை விட மிகப் பிரியமானவரும் நெருக்கமானவரும் உரிமையுள்ளவரும் ஆவார்.அவர்தான் நபிமார்களின் இறுதி முத்திரை ஆவார். அல்லாஹ் அவரை மனிதர்கள் மற்றும் ஜின்களுக்கு நற்செய்தி அளிப்பவராகவும் அச்சமூட்டி எச்சரிப்பவராகவும் அல்லாஹ்வின் பக்கம் அவனுடைய அனுமதியின் படி அழைப்பவராகவும் வெளிச்சம் தருகின்ற விளக்காகவும் அனுப்பினான். தீன் - மார்க்கம், துன்யா - உலகம் என அனைத்தின் சீர்த்திருத்தத்தையும் கொடுத்து அவரை அல்லாஹ் தூதராக அனுப்பினான். அடியார்கள்

அல்லாஹ்வை வணங்குவதற்கும் அல்லாஹ் அளித்த வாழ்வாதாரத்தைக் கொண்டு அல்லாஹ்வை வணங்குவதில் அவர்கள் உதவி தேடுவதற்கும் அல்லாஹ், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பினான். அதாவது எப்படி வணங்குவது, உலக வாழ்க்கையை இபாதத்திற்கு துணையாக எப்படி அமைப்பது என்று கற்பிப்பதற்காக அல்லாஹ் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பினான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியார்களில் மிக அறிந்தவர்கள், மிக உண்மையாளர்கள், அடியார்களின் நன்மையை அதிகம் நாடக்கூடியவர்கள், மிக அதிகம் விளக்கம் உடையவர்கள் ஆவார்கள். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அஹ்லுஸ் ஸுன்னா மிகவும் கண்ணியப்படுத்துவார்கள்; அதிகம் நேசிப்பார்கள்; படைப்புகள் அனைவரின் நேசத்தைவிட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேசத்தைத்தான் முற்படுத்துவார்கள்; தங்களது மார்க்கத்தின் அசல் விஷயங்கள், பிரிவு விஷயங்கள் என அனைத்திலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத்தான் பின்பற்றுவார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றையும் வழிமுறையையும் மற்ற எல்லோருடைய கூற்றை விடவும் வழிமுறையை விடவும் முற்படுத்துவார்கள்; அதற்கு முன்னுரிமை அளிப்பார்கள்.

மேலும் அஹ்லுஸ் ஸுன்னாவின் நம்பிக்கையாவது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வேறு எவருக்கும் இல்லாத சிறப்புகளையும் உயர்வுகளையும் விசேஷ

தன்மைகளையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். அவர்கள்தான் படைப்புகளில் அந்தஸ்தால் மிக மிக உயர்ந்தவர்கள்; மதிப்பால் மிக கண்ணியத்திற்குரியவர்கள்; எல்லா சிறப்புகளிலும் பரிபூரணமானவர்கள். தனது உம்மத்திற்கு - சமுதாயத்திற்கு எந்த நன்மையையும் அவர்கள் அறிவிக்காமல் விடவில்லை; எந்த ஒரு தீமையிலிருந்தும் அவர்களை எச்சரிக்காமல் இருக்கவில்லை.

மேலும், அஹ்லுஸ் ஸுன்னா அல்லாஹ் இறக்கிய எல்லா வேதங்களையும், அல்லாஹ் அனுப்பிய எல்லா நபிமார்களையும் நம்பிக்கை கொள்வார்கள். அவர்களுக்கு இடையில் பிரிவினை, பாகுபாடு காட்ட மாட்டார்கள்.

மேலும், விதியை முழுமையாக நம்பிக்கை கொள்வார்கள். அடியார்களின் செயல்களை அவற்றில் உள்ள நல்லதையும் கெட்டதையும் அல்லாஹ் சூழ்ந்து அறிந்திருக்கின்றான். அவற்றை அல்லாஹ்வின் எழுதுகோல் முன்னரே எழுதிவிட்டது. இவற்றில் அவனுடைய நாட்டம்தான் செல்லுபடியாகும். அவனுடைய ஞானத்தின் அடிப்படையில்தான் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளது.

அவன் அடியார்களுக்கு தனி ஆற்றலையும் அவர்களுக்கு என்று தனி விருப்பத்தையும் படைத்துள்ளான். அதன்படிதான் அவர்கள் சுயமாக பேசுகிறார்கள்; அவர்கள் தங்கள் விருப்பப்படி எதையும் செய்கிறார்கள்; அவன் அவர்களை எந்த ஒரு விஷயத்திலும் நிர்ப்பந்திப்பதில்லை. அவர்களாகத்தான் எதையும் விரும்பி செய்கிறார்கள். தனது ஞானத்தின்படியும் நீதத்தின்படியும் முஃமின்களுக்கு - நம்பிக்கையாளர்களுக்கு ஈமானை விருப்பமாக்கி வைத்தான்; ஈமானை அவர்களது

உள்ளத்தில் அலங்கரித்து வைத்தான்; இறை நிராகரிப்பையும் பாவத்தையும் மார்க்கத்தை மீறுவதையும் அவர்களுக்கு வெறுப்பானதாக ஆக்கினான்.

மேலும் அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைகளாவன, அவர்கள் அல்லாஹ்விற்கும் அவனது வேதத்திற்கும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களின் ஆட்சியாளர்களுக்கும் முஸ்லிம் பொது மக்களுக்கும் நன்மையை நாடுவதை மார்க்கமாக கருதுகிறார்கள். மார்க்கம் கடமையாக்கிய முறைப்படி அவர்கள் நன்மையை ஏவுவார்கள்; தீமையிலிருந்து தடுப்பார்கள்; பெற்றோருக்கு நன்மை செய்ய தூண்டுவார்கள்; உறவுகளை சேர்த்துவாழ வலியுறுத்துவார்கள்.

அண்டை வீட்டார்களுக்கும் அடிமைகளுக்கும் பணியாளர்களுக்கும் இன்னும் யாருக்கெல்லாம் நாம் கடமைப்பட்டுள்ளோமோ அவர்களுக்கும் உபகாரம் செய்ய ஏவுவார்கள்.

நற்குணங்களுக்கும் அழகிய பண்புகளுக்கும் அவர்கள் மக்களை அழைப்பார்கள்; கெட்ட, அற்பமான குணங்களை விட்டு மக்களை தடுப்பார்கள்.

யார் செயலாலும் குணத்தாலும் மிக அழகானவராகவும் சொல்லால் மிக உண்மையானவராகவும், எல்லா நன்மைகளையும் சிறப்புகளையும் செய்வதற்கு நேர்வழி பெற்றவராகவும் அற்பமான, இழிவான எல்லா குணங்களை விட்டும் செயல்களை விட்டும் தூரமானவராகவும் இருக்கின்றாரோ அவர்தான் முஃமின்களில் முழுமையான ஈமான் உடையவர் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

மார்க்க சட்டங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்பித்த முறைப்படி நிலை நிறுத்த வேண்டும், மார்க்க சட்டங்களை சீர் கெடுக்கக்கூடிய காரியங்களை விட்டும் மக்களை எச்சரிக்க வேண்டும் என்று மக்களை ஏவுவார்கள்.

முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஜிஹாதுக்கு அழைக்கும்போது அவர்களுடன் சேர்ந்து ஜிஹாதுக்கு செல்வார்கள். அந்த ஆட்சியாளர்கள் நல்லவர்களாக இருந்தாலும் சரி, அல்லது அமல்கள் விஷயத்தில் பாவிகளாக இருந்தாலும் சரி. மார்க்கத்தின் மிக உயர்ந்த ஒரு சிகரமாக அவர்கள் ஜிஹாதை கருதுகிறார்கள். ஜிஹாது பல வகைப்படும். ஒன்று கல்வியாலும் ஞானத்தாலும் ஆதாரத்தாலும் போரிடுவது. மற்றொன்று வாளேந்திப் போரிடுவது. ஒவ்வொரு முஸ்லிமும் தன்னால் முடிந்தளவு மார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மேலும், அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைகளில் உள்ளவைதான், அவர்கள் முஸ்லிம்களின் ஆட்சி அதிகாரம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று ஆர்வமூட்டுவார்கள்; முஸ்லிம்களின் உள்ளங்களுக்கு இடையில் ஒற்றுமையையும் இணக்கத்தையும் ஏற்படுத்த அவர்கள் உழைப்பார்கள்; பிரிவினை ஏற்படுத்துவது, பகைமை பாராட்டுவது, குரோதம் கொள்வது, சண்டை சச்சரவுகள் செய்வது என அனைத்தையும் விட்டு அவர்கள் எச்சரிப்பார்கள்; இந்த நல்ல நோக்கத்திற்காக ஆகுமான வழிகளில் முயற்சிப்பார்கள்.

மேலும், அஹ்லுஸ் ஸுன்னாவின் அடிப்படைகளில் உள்ளவைதான், மக்களுடைய உயிர்கள், செல்வங்கள், மான மரியாதை, இன்னும் மக்களுடைய எந்த ஓர் உரிமைகளிலும் கெடுதி செய்வதிலிருந்து பிறரை அவர்கள் தடுப்பார்கள். எல்லாக் காரியங்களிலும் நீதமாக, நேர்மையாக நடக்க வேண்டுமென்றும்,

பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் மக்களை ஏவுவார்கள். (தாங்களும் அவ்வாறே நடந்து கொள்வார்கள்.)

மேலும், உம்மத்துகளில் சிறந்தது முஹம்மது ﷺ அவர்களின் உம்மத் - சமுதாயம் என்றும் அந்த உம்மத்தில் சிறந்தவர்கள் நபித்தோழர்கள் என்றும் அவர்களில் குறிப்பாக, நேர்வழி பெற்ற நான்கு கலீஃபாக்கள், சொர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் அளிக்கப்பட்ட பத்து நபித்தோழர்கள், பத்ர் போரில் பங்குபெற்றவர்கள், (உஹுது போரில் பங்குபெற்றவர்கள்,) 'பைஅத்துர் ரிழ்வான்' என்ற ஹுதைபிய்யா ஒப்பந்தத்தில் பங்குபெற்றவர்கள், முந்தியவர்களாக, முதலாமவர்களாக இஸ்லாமை ஏற்ற முஹாஜிர்கள், அன்சாரிகள் என அஹ்லுஸ் ஸுன்னா ஈமான் கொள்வார்கள். ஸஹாபாக்களை - நபித்தோழர்களை அவர்கள் நேசிப்பார்கள். நபித்தோழர்களை நேசிப்பதை அல்லாஹ்வுடைய மார்க்கமாக அவர்கள் கருதுவார்கள். நபித்தோழர்களின் சிறப்புகளை மக்களுக்கு மத்தியில் பரப்புவார்கள். அவர்களின் குறைகள் பற்றி அவர்கள் வாய்மூடி மௌனம் காப்பார்கள்.

நேர்வழி பெற்ற அறிஞர்களை அல்லாஹ்விற்காக மதித்து நடப்பார்கள். இதை மார்க்கமாக பார்ப்பார்கள். அவ்வாறே, நீதி செலுத்துகின்ற ஆட்சியாளர்களையும் மதிப்பார்கள். இன்னும் மார்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்துள்ள நல்லவர்களின் கண்ணியங்களை பேணி நடப்பார்கள்.

சந்தேகம், இணைவைத்தல், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முரண்படுவது, நயவஞ்சகம் மற்றும் கெட்ட குணங்களை விட்டும் தங்களை அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் என்றும், மரணம் வரை நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கத்தின் மீது அல்லாஹ் தங்களை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள்.

மேற்கூறப்பட்ட இந்த அடிப்படைகளை அவர்கள் நம்பிக்கை கொள்கிறார்கள்; இவற்றை கொள்கையாக அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்கள்; இவற்றின் பக்கம்தான் அவர்கள் மக்களை அழைக்கின்றார்கள்.

## தவ்ஹீதுடைய சிறப்புகள்

தவ்ஹீது என்றால் அல்லாஹ் ஒருவனை மட்டும் இறைவனாக ஏற்று அவனை மட்டும் வணங்குவதாகும்.

இதன் சிறப்புகள் பின்வருமாறு:

1). உலகம் இன்னும் மறுமையின் துன்பங்களை நீக்குவதற்கும் அதன் தண்டனைகளை தவிர்ப்பதற்கும் இந்த தவ்ஹீதுதான் மிகப்பெரிய காரணமாகும்.

2). இதன் மிகப் பெரிய பலன்களில் ஒன்று, ஒருவருடைய உள்ளத்தில் கடுகளவு தவ்ஹீது இருந்தாலும் அது அவரை நரகத்தில் நிரந்தரமாக தங்கிவிடுவதை விட்டும் பாதுகாக்கின்றது. ஓர் அடியானின் உள்ளத்தில் தவ்ஹீது முழுமையாக இருந்தால் அவர் நரகத்தில் நுழைவதை விட்டும் முற்றிலுமாக அது அவரை பாதுகாக்கின்றது.

3). தவ்ஹீதுடையவருக்குத்தான் முழுமையான நேர்வழியும் இம்மையிலும் மறுமையிலும் முழுமையான பாதுகாப்பும் கிடைக்கும்.

4). அல்லாஹ்வின் பொருத்தத்தையும் நற்கூலியையும் பெறுவதற்கு இது ஒன்றுதான் காரணம். மறுமையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய

சிபாரிசுக்கு மிகத் தகுதிபெற்ற பாக்கியவான், மனத்தூய்மையுடன் ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ வை கூறியவர்தான்.

5). இதன் மகத்தான சிறப்புகளில் ஒன்று, வெளிப்படையான, மறைவான எல்லா நல்ல அமல்களும் எல்லா நல்ல சொற்களும் தவ்ஹீதுடைய அடிப்படையில்தான் அங்கீகரிக்கப்படுகின்றன. அவற்றுக்குரிய நற்கூலிகளும் தவ்ஹீதுடைய அடிப்படையில் தான் கொடுக்கப்படுகின்றன. தவ்ஹீதும் இக்லாஸூம் (மனத் தூய்மை) வலிமையாக இருக்கும்போது இந்தக் காரியங்களும் முழுமையும் நிறைவும் பெறுகின்றன.

6). இதன் சிறப்புகளில் ஒன்று, இது அடியானுக்கு நன்மைகளை செய்வதையும் பாவங்களை விடுவதையும் இலகுவாக்கித் தருகிறது; சோதனைகளில் அடியானுக்கு மன ஆறுதல் அளிக்கிறது. தனது ஈமானிலும் தவ்ஹீதிலும் மனத்தூய்மையுடன் இருப்பவருக்கு நன்மைகளை செய்வது இலேசாகி விடுகின்றது. ஏனெனில், அவர் அல்லாஹ்வின் நற்கூலியையும் அவனது திருப்பொருத்தத்தையும் ஆதரவு வைக்கின்றார். மேலும், மனம் தவறாக ஆசைப்படக்கூடிய பாவங்களை விடுவது அவருக்கு சுலபமாகி விடுகின்றது. ஏனெனில், அவர் அல்லாஹ்வின் கோபத்தையும் அவனது தண்டனையையும் பயப்படுகின்றார்.

7). தவ்ஹீது, உள்ளத்தில் முழுமையாகிவிட்டால் அந்த அடியானின் உள்ளத்தில் ஈமானை அல்லாஹ் விருப்பமாக்கி விடுகின்றான்; அவருடைய உள்ளத்தில் அதை அலங்கரித்து விடுகின்றான். நிராகரிப்பையும் பாவத்தையும் மாறுசெய்வதையும் அவருக்கு வெறுப்பாக்கி விடுகின்றான். இன்னும் அவரை நேர்வழி பெற்ற நல்லவர்களில் அல்லாஹ் ஆக்கிவிடுகின்றான்.

8). சிரமங்களையும் துன்பங்களையும் வேதனைகளையும் வலிகளையும் இந்த தவ்ஹீது அடியானுக்கு இலகுவாக்கி விடுகின்றது. அடியான் தவ்ஹீதையும் ஈமானையும் முழுமைப்படுத்துவதற்கு ஏற்ப அவன் சிரமங்களையும் வலிகளையும் விரிந்த உள்ளத்துடனும் திருப்தி பெற்ற ஆன்மாவுடனும் எதிர்கொள்கிறான். அல்லாஹ்வின் விதிகளை ஏற்றுக்கொள்வதுடனும் அதற்கு முற்றிலும் கட்டுப்படுவதுடன் அவன் பொறுமை காக்கிறான்.

9). தவ்ஹீதுடைய மிக மகத்தான சிறப்புகளில் ஒன்று, அது அடியானை அவன் படைப்புகளுக்கு அடிமையாக இருப்பதை விட்டும் விடுவிக்கிறது. அவ்வாறே, அவர்களை சார்ந்து இருப்பதையும், அவர்களை பயப்படுவதையும், அவர்களை ஆதரவு வைப்பதையும் அவர்களுக்காக அமல்கள் செய்வதை விட்டும் விடுவிக்கிறது. இத்துடன் அல்லாஹ்வை மட்டும் பயந்தவனாக, அவனை மட்டும் வணங்கியவனாக அடியான் ஆகிவிடுகின்றான். அவனைத் தவிர அவன் யாரையும் ஆதரவு வைப்பதில்லை; அவனைத் தவிர அவன் யாரையும் பயப்படுவதில்லை; அவன் பக்கமே தவிர யாரிடமும் அவன் திரும்புவதில்லை. இதன் மூலம் அவனுடைய வெற்றி முழுமை பெறுகிறது, உறுதி அடைகிறது.

10). வேறு எந்த ஒன்றுக்கும் இல்லாத சிறப்பு இந்த தவ்ஹீதுக்கு இருக்கிறது. அதாவது, தவ்ஹீது உள்ளத்தில் முழுமையாக ஆகிவிட்டால், பரிபூரணமான இக்லாஸுடன் தவ்ஹீது உறுதியாக ஆகிவிட்டால், இந்த தவ்ஹீது குறைவான அமலையும் அதிகமாக ஆக்கிவிடும். இந்த தவ்ஹீதுடைய அடியானின் ஒவ்வொரு நல்ல அமல்களும் நல்ல சொற்களும் கணக்கிட முடியாத அளவு பன்மடங்காக பெருகிவிடும். தராசின் தட்டில் ஏழு வானங்களை விடவும் ஏழு பூமிகளைவிடவும்

இந்த கலிமாதான் கனமுள்ளதாக இருக்கும். மேலும் பார்வை செல்லும் அளவு நீண்ட தூரமுள்ள பாவங்களின் தொண்ணூற்றி ஒன்பது ஏடுகளை விடவும் “லா இலாஹ இல்லல்லாஹ்” எழுதப்பட்டுள்ள ஒரு சீட்டு கனமுள்ளதாக இருக்கும். இதற்கு காரணம் இந்த கலிமாவை கூறியவரின் உள்ளத்தில் உள்ள மனத்தூய்மை ஆகும். இன்று பலர் இந்த கலிமாவை கூறுகின்றனர். ஆனால், அவர்களின் கலிமா இந்தளவு வலிமை உள்ளதாக இருப்பதில்லை. அதற்கு காரணம், மேற்கூறப்பட்ட அந்த அடியானின் உள்ளத்தில் இருப்பது போன்ற இக்லாஸும் தவ்ஹீதும் இவர்களின் உள்ளத்தில் இல்லாததுதான்.

11). இந்த தவ்ஹீதை உடையவர்களுக்கு இவ்வுலகில் வெற்றி, உதவி, கண்ணியம், சிறப்பு, நேர்வழி, சொர்க்கப்பாதை இலகுவாக்கப்படுதல், நிலைமைகளை சீர் செய்தல், சொல், செயல்களை நேர்மைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அல்லாஹ் பொறுப்பேற்றுள்ளான். இது இந்த தவ்ஹீதின் சிறப்புகளில் உள்ளதாகும்.

12). ஈமானையும் தவ்ஹீதையும் உடைய தனது அடியார்களை விட்டு இம்மை மறுமையின் தீங்குகளை அல்லாஹ் தடுத்து விடுகின்றான். தூய்மையான நல்ல வாழ்க்கையை இவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிகின்றான். இவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வின் பக்கம் நிம்மதி அடைகின்றன. அல்லாஹ்வை நினைவு கூர்வதால் இவர்களின் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன.

நாம் கூறிய இந்த சிறப்புகளுக்கு குர்ஆனிலும் ஸுன்னாவிலும் அறியப்பட்ட அதிகமான ஆதாரங்கள் உள்ளன.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

-------------

# اَلْكَلِمَةُ الطَّيِّبَةُ

كتاب مختصر مؤلف من الكتب العقدية التى ألفها العلماء الكبار

## தூய திரு கலிமா

இந்நூல் மூத்த அறிஞர்களின் கொள்கை விளக்க நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டது.



بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلَى رَسُولِ اللّٰهِ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ

## முன்னுரை

தூய திரு கலிமா என்று நாம் கூறுவது,

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُولُ اللّٰهِ

லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற திரு வாசகத்தைத்தான்.

இதன் பொருள்:

உண்மையில் வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை அல்லாஹ்வைத் தவிர! முஹம்மது ﷺ அல்லாஹ்வுடைய தூதர் ஆவார்கள்!

இந்த தூய திரு வாசகத்திற்கு “**شهادة التوحيد**” “ஷஹாததுத் தவ்ஹீது” ஏகத்துவத்தின் சாட்சியம் எனக் கூறப்படும்.

ஓர் அடியானின் முதல் கடமையே இந்த சாட்சியத்தைக் கூறுவதுதான்.

ஆதாரம் 1

عَنْ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا أَنَّ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بَعَثَ مُعَاذًا رَضِيَ اللّٰهُ عَنْهُ إِلَى الْيَمَنِ فَقَالَ ادْعُهُمْ إِلَى شَهَادَةِ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَنِّي رَسُولُ اللّٰهِ

நபி ﷺ அவர்கள் முஆது இப்னு ஜபல் ؓ அவர்களை எமன் (ஏமான்) நாட்டுக்கு ஆளுநராக அனுப்பினார்கள். அப்போது கூறினார்கள்: "நீர் அவர்களை லா இலாஹ இல்லல்லாஹு நிச்சயமாக உண்மையில் கடவுள் (வணக்கத்திற்குரியவன்) அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை. மேலும் நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய தூதராக இருக்கிறேன் என்று சாட்சி கூறுவதற்கு அழைப்பீராக!"

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ؓ | நூல்: ஸஹீஹுல் புகாரீ | எண்: 1395

**இந்த தூய திரு கலிமாதான் இஸ்லாமிய மார்க்கத்தின் நுழைவாயில் ஆகும். இந்த தூய திரு கலிமா இஸ்லாமிய மார்க்கத்தின் முதல் தூணாகும். இதை ஒருவர் மனமுவந்து மொழிந்து இதன் பொருளையும் கருத்தையும் புரிந்து செயல்படுத்தினால்தான் அவர் முஸ்லிமாக ஆகமுடியும்; முஸ்லிமாக இருக்க முடியும்.**

ஆதாரம் 2

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ بُنِيَ الإِسْلاَمُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لاَ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللّٰهِ وَإِقَامِ الصَّلاَةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَالحَجِّ وَصَوْمِ رَمَضَانَ.

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: இஸ்லாம் ஐந்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக உண்மையில் கடவுள் (-வணக்கத்திற்குரியவன்) அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை. மேலும் நிச்சயமாக முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர் ஆவார்கள் என்று சாட்சி கூறுவது. தொழுகையை நிலைநிறுத்துவது. ஸகாத்தைக் கொடுப்பது. ஹஜ் செய்வது. ரமழானில் நோன்பு நோற்பது.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ | நூல்: ஸஹீஹுல் புகாரீ |எண்: 8.

**இந்த தூய திரு கலிமாவை ஏற்காதவர் அல்லது இதை வாயளவில் கூறிவிட்டு, வணக்க வழிபாடுகளில் சிலவற்றை அல்லாஹ் அல்லாத ஒருவருக்கு செய்பவர், அவர் காஃபிர் - இறை நிராகரிப்பாளர் | முஷ்ரிக் - இணைவைப்பவர் ஆவார்.**

ஆதாரம் 1

وَمَنْ يَدْعُ مَعَ اللّٰهِ إِلٰهًا آخَرَ لَا بُرْهَانَ لَهُ بِهِ فَإِنَّمَا حِسَابُهُ عِنْدَ رَبِّهِ إِنَّهُ لَا يُفْلِحُ الْكَافِرُونَ (١١٧)

யார் அல்லாஹ்வுடன் வேறு ஒரு கடவுளை அழைப்பாரோ - அவருக்கு அதற்கு அறவே ஆதாரம் இல்லை - அவரின் விசாரணை எல்லாம் அவரது இறைவனிடம்தான். நிச்சயமாக காஃபிர்கள் - நிராகரிப்பாளர்கள் வெற்றி பெறமாட்டார்கள்.

அல்குர்ஆன் அத்தியாயம் 23 சூரா அல்முஃமினூன் வசனம்: 117

**ஆதாரம் 2**

**وَادْعُ إِلَى رَبِّكَ وَلَا تَكُونَنَّ مِنَ الْمُشْرِكِينَ (٨٧) وَلَا تَدْعُ مَعَ اللَّهِ إِلَٰهًا آخَرَ لَا إِلَٰهَ إِلَّا هُوَ كُلُّ شَيْءٍ هَالِكٌ إِلَّا وَجْهَهُ لَهُ الْحُكْمُ وَإِلَيْهِ تُرْجَعُونَ (٨٨)**

(நபியே!) உமது இறைவனின் பக்கம் அழைப்பீராக! இணைவைப்பவர்களில் நீர் ஆகிவிடாதீர்! அல்லாஹ்வுடன் வேறு ஒரு கடவுளை அழைக்காதீர்! அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை. அவனது திரு முகத்தைத் தவிர எல்லா பொருளும் அழியக்கூடியதே! அவனுக்கே அதிகாரங்கள் எல்லாம் உரியன. அவன் பக்கமே நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 28 சூரா அல்கஸஸ் வசனம் : 87, 88)

-------------------------------

# லா இலாஹ இல்லல்லாஹ் உடைய சிறப்புகள்

**ஆதாரம் 1**

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ أَنَّهُ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللّٰهِ مَنْ أَسْعَدُ النَّاسِ بِشَفَاعَتِكَ يَوْمَ القِيَامَةِ فَقَالَ لَقَدْ ظَنَنْتُ يَا أَبَا هُرَيْرَةَ أَنْ لَا يَسْأَلَنِي عَنْ هَذَا الحَدِيثِ أَحَدٌ أَوَّلُ مِنْكَ لِمَا رَأَيْتُ مِنْ حِرْصِكَ عَلَى الحَدِيثِ أَسْعَدُ النَّاسِ بِشَفَاعَتِي يَوْمَ القِيَامَةِ مَنْ قَالَ لاَ إِلٰهَ إِلَّا اللّٰهُ، خَالِصًا مِنْ قِبَلِ نَفْسِهِ

அல்லாஹ்வின் தூதரே! மறுமை நாளில் உங்கள் பரிந்துரைக்கு மனிதர்களில் மிகத் தகுதியானவர் யார்? என்று கேட்டேன். அபூ ஹுரைராவே! உமக்கு ஹதீஸின் மீதுள்ள பேராசையை நான் பார்த்ததால் உம்மை விட முதலாமவராக ஒருவரும் இந்த ஹதீஸைப் பற்றி என்னிடம் கேட்கமாட்டார் என்று திட்டமாக நான் அறிந்திருந்தேன். மறுமை நாளில் எனது பரிந்துரைக்கு மிகத் தகுதியானவர் தனது உள்ளத்தில் தூய்மையானவராக **‘லா**

**இலாஹ இல்லல்லாஹ்**' கூறியவர்தான் என்று ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ | நூல்: ஸஹீஹுல் புகாரீ | எண்: 6570.

**ஆதாரம் 2**

قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَإِنَّ اللّٰهَ قَدْ حَرَّمَ عَلَى النَّارِ مَنْ قَالَ لاَ إِلٰهَ إِلَّا اللّٰهُ يَبْتَغِي بِذَلِكَ وَجْهَ اللّٰهِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் முகத்தை நாடியவராக “லா இலாஹ இல்லல்லாஹ்” என்று கூறியவரை நிச்சயமாக அல்லாஹ் நரகத்தின் மீது தடை செய்துவிட்டான்.

அறிவிப்பாளர்: மஹ்மூது இப்னு அர்ரபீஃ அல்அன்ஸாரி ؓ | நூல்: ஸஹீஹுல் புகாரி | எண்: 425

**ஆதாரம் 3**

قَالَ مَا مِنْ عَبْدٍ قَالَ لاَ إِلٰهَ إِلَّا اللّٰهُ ثُمَّ مَاتَ عَلَى ذٰلِكَ إِلَّا دَخَلَ الجَنَّةَ

நபி ﷺ கூறினார்கள்: ஓர் அடியான் “லா இலாஹ இல்லல்லாஹு” என்று கூறி, பிறகு, அதன் மீதே அவர் இறந்துவிட்டால் அவர் கண்டிப்பாக சொர்க்கம் செல்வார்.

அறிவிப்பாளர்: அபூ தர் ؓ | நூல்: ஸஹீஹுல் புகாரீ | எண்: 5827.

--------------------------------

# லா இலாஹ இல்லல்லாஹ்
# உடைய பொருள் மற்றும் விளக்கம்

لا அறவே இல்லை.

إله வணங்கப்படுபவன், வணக்கத்திற்குரியவன், கடவுள், தெய்வம், இறைவன்.

إلا தவிர

الله அல்லாஹ்வை

**இக்கலிமாவின் கருத்து: அல்லாஹ்தான் வணக்கத்திற்குரியவன். அல்லாஹ்வைத் தவிர உண்மையில் வணங்கப்படுபவன் அறவே இல்லை. அவன்தான் உண்மையான கடவுள். வணக்க வழிபாடுகளை அல்லாஹ்விற்கு மட்டுமே செய்ய வேண்டும். வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் செய்யக்கூடாது. அவனைத் தவிர வணங்கப்படுகின்ற எதுவும் வணங்கப்படுவதற்கு தகுதியானவை இல்லை. அவன் ஒருவன்தான் கடவுள். அவனைத்தவிர கடவுள் யாரும் இல்லை.**

இந்தக் கருத்தைத்தான் பின்வரும் குர்ஆன் வசனங்கள் உணர்த்துகின்றன; உறுதிப்படுத்துகின்றன.

**ஆதாரம் 1**

إِنَّنِي أَنَا اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدْنِي

நிச்சயமாக நான்தான் அல்லாஹ், என்னைத்தவிர உண்மையில் வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை. ஆகவே, என்னை வணங்குவீராக!

(அல்குர்ஆன் அத்தியாயம் 20 சூரா தாஹா வசனம் : 14)

**ஆதாரம் 2**

وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ
لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ (٢٥)

உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எந்த ஒரு தூதருக்கும் இவ்வாறு வஹ்யி அறிவிக்காமல் இல்லை, "நிச்சயமாக என்னைத் தவிர உண்மையில் வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை. ஆகவே, என்னை வணங்குங்கள்!

அல்குர்ஆன் அத்தியாயம் 21 சூரா அல்அன்பியா வசனம் : 25

**ஆதாரம் 3**

فَقَالَ يَاقَوْمِ اعْبُدُوا اللَّهَ مَا لَكُمْ مِنْ إِلَٰهٍ غَيْرُهُ

நூஹ் அலைஹிஸ் ஸலாம் கூறினார்: "என் சமுதாய மக்களே! அல்லாஹ்வையே வணங்குங்கள்! கடவுள் - வணக்கத்திற்குரியவன் அவனை அன்றி உங்களுக்கு (வேறு யாரும்) இல்லை."

(அல்குர்ஆன் அத்தியாயம் 23 சூரா அல்முஃமினூன் வசனம்: 23)

**ஆதாரம் 4**

ذَٰلِكُمُ اللَّهُ رَبُّكُمْ لَا إِلَٰهَ إِلَّا هُوَ خَالِقُ كُلِّ شَيْءٍ فَاعْبُدُوهُ
وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ وَكِيلٌ (١٠٢)

அந்த அல்லாஹ்தான் உங்கள் இறைவன். அவனைத் தவிர உண்மையில் வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை. ஆகவே, அவனை வணங்குங்கள்! அவன்தான் எல்லா பொருள்கள் மீதும் பொறுப்பாளன் ஆவான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 6 சூரா அல்அன்ஆம் வசனம் :102)

**ஆதாரம் 5**

إِنِ الْحُكْمُ إِلَّا لِلَّهِ أَمَرَ أَلَّا تَعْبُدُوا إِلَّا إِيَّاهُ

அதிகாரம் இல்லை அல்லாஹ்விற்கே தவிர! நீங்கள் அவனைத் தவிர (வேறு யாரையும்) வணங்கக் கூடாது என்று அவன் கட்டளையிட்டுள்ளான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 12 சூரா யூஸுஃப் வசனம் : 40)

**ஆதாரம் 6**

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ

திட்டவட்டமாக எல்லா சமுதாயத்திலும் நாம் ஒரு தூதரை அனுப்பினோம். ஏனெனில், நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்! தாகூத்தை - அல்லாஹ்வை அன்றி வணங்கப்படக்கூடியதை - விட்டு விலகிவிடுங்கள்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 16 சூரா அந்நஹ்ல் வசனம் : 36)

**ஆதாரம் 7**

أَلَّا تَعْبُدُوا إِلَّا اللَّهَ

அல்லாஹ்வைத் தவிர (வேறு யாரையும்) நீங்கள் வணங்காதீர்கள்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 11 சூரா ஹூது வசனம் : 2)

**ஆதாரம் 8**

فَلَا تَجْعَلُوا لِلَّهِ أَنْدَادًا وَأَنْتُمْ تَعْلَمُونَ (٢٢)

நீங்கள் அல்லாஹ்விற்கு சமமானவர்களை ஏற்படுத்தி விடாதீர்கள்! நீங்கள் (அவனுக்கு சமமானவர் எவரும் இல்லை என்று) அறிகின்றீர்கள்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 2 சூரா அல்பகரா வசனம் : 22)

**ஆதாரம் 9**

وَإِذْ قَالَ إِبْرَاهِيمُ لِأَبِيهِ وَقَوْمِهِ إِنَّنِي بَرَاءٌ مِمَّا تَعْبُدُونَ (٢٦)
إِلَّا الَّذِي فَطَرَنِي فَإِنَّهُ سَيَهْدِينِ (٢٧)

இப்றாஹீம் தமது தந்தையையும், தமது மக்களையும் நோக்கிக் கூறியதை நினைவு கூர்வீராக! நிச்சயமாக நான் நீங்கள் வணங்குகின்ற அனைத்தையும் விட்டும் விலகியவன் ஆவேன். ஆனால், என்னைப் படைத்தவனைத் தவிர. (அவனை விட்டு நான் விலகியவன் அல்லன்.) நிச்சயமாக அவன் எனக்கு நேர்வழி காட்டுவான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 43 சூரா அஸ்ஸுக்ருஃப் வசனம்: 26,27)

**ஆதாரம் 10**

ذَلِكَ بِأَنَّ اللَّهَ هُوَ الْحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِنْ دُونِهِ هُوَ الْبَاطِلُ وَأَنَّ اللَّهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيرُ (٦٢)

அது ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மையானவன்; இன்னும் நிச்சயமாக அவனை அன்றி அவர்கள் அழைப்பவைதான் பொய்யானவை; இன்னும் நிச்சயமாக அல்லாஹ்தான் மிக உயர்ந்தவன், மிகப் பெரியவன் ஆவான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 22 சூரா அல்ஹஜ் வசனம் : 62)

**ஆதாரம் 11**

وَلَا تَجْعَلُوا مَعَ اللَّهِ إِلَٰهًا آخَرَ

நீங்கள் அல்லாஹ்வுடன் வணக்கத்திற்குரிய வேறு ஒருவனை ஏற்படுத்தி விடாதீர்கள்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 51 சூரா அத்தாரியாத் வசனம்: 51)

**ஆதாரம் 12**

وَأَنَّ الْمَسَاجِدَ لِلَّهِ فَلَا تَدْعُوا مَعَ اللَّهِ أَحَدًا (١٨)

இன்னும் நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்விற்கு உரியன. ஆகவே, அல்லாஹ்வுடன் வேறு ஒருவரை அழைக்காதீர்கள்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 72 சூரா அல்ஜின்னு வசனம்: 18)

-------------------------------

## مُحَمَّدٌ رَّسُولُ اللّٰهِ

## முஹம்மதுர் ரசூலுல்லாஹ் உடைய பொருள்-விளக்கம்

**محمد** முஹம்மது

**رسول** தூதர்

**الله** அல்லாஹ்வுடைய.

முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர்.

**இதன் விளக்கம்: நபி முஹம்மது ﷺ அவர்கள் கூறிய செய்திகளில் அவர்கள் உண்மையானவர்கள். அவர்கள் கூறியவை அனைத்தும் உண்மையே! அல்லாஹ் அவர்களுக்கு இறக்கி வைத்த அனைத்தையும் அவர்கள் மக்களுக்கு முழுமையாக எடுத்துரைத்தார்கள். அவர்களுக்கு நாம் முழுமையாகக் கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்; அவர்களுக்கு மாறு செய்யக் கூடாது. அவர்களுடைய கட்டளைகளையும் வழிமுறைகளையும் நாம் பின்பற்றி நடக்க வேண்டும். அவர்கள் தடுத்த காரியங்கள் அனைத்திலிருந்தும் நாம் விலகி இருக்க வேண்டும். அவர்கள் கற்பித்த வழியில்தான் நாம் அல்லாஹ்வை வணங்க வேண்டும். வணக்க வழிபாடுகள் அனைத்தையும்**

**அவர்கள் காண்பித்து கொடுத்த முறையில்தான் செய்ய வேண்டும். வணக்க வழிபாடுகளை நமது விருப்பத்திற்கு ஏற்ப நாம் அமைத்துக் கொள்ளக் கூடாது.**

**ஆதாரம் 1**

أُبَلِّغُكُمْ رِسَالَاتِ رَبِّي وَأَنَا لَكُمْ نَاصِحٌ أَمِينٌ (٦٨)

எனது இறைவனின் தூது செய்திகளை நான் உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன். இன்னும், நான் உங்களுக்கு நன்மையை விரும்பக்கூடியவன், நம்பிக்கைக்குரியவன் ஆவேன்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 7 சூரா அல்அஃராஃப் வசனம்: 68)

இந்த வசனம் நபி நூஹ் ﷺ கூறியதாக வருகிறது. இவ்வாறே பல இறைத் தூதர்கள் கூறியதும் அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. இறைத்தூதர்கள் எல்லோரும் நம்பிக்கைக்குரியவர்கள்; உண்மையாளர்கள் என்பதை இந்த வசனங்கள் மூலமாக நாம் அறிய வருகிறோம். நமது நபி ﷺ அவர்கள் மீது இறக்கப்பட்ட இந்த வேதம் முன் சென்ற நபிமார்களின் உண்மைக்கும் நம்பகத் தன்மைக்கும் சாட்சி கூறுவது நமது நபியின் உண்மைக்கும் நம்பகத் தன்மைக்கும் சாட்சி கூறுவதாகும்.

**ஆதாரம் 2**

إِنْ أَتَّبِعُ إِلَّا مَا يُوحَى إِلَيَّ

நான் பின்பற்ற மாட்டேன் எனக்கு வஹ்யி அறிவிக்கப்படுவதைத் தவிர.

(அல்குர்ஆன் அத்தியாயம் 6 சூரா அல்அன்ஆம் வசனம் : 50)

நபி ﷺ அவர்கள் செய்தது, கூறியது எல்லாம் அல்லாஹ்வின் கட்டளையின்படிதான் என்பதை இந்த வசனம் உணர்த்துகிறது. எனவே, அவர்கள் செய்ததில், கூறியதில் பொய் கலக்க முடியாது.

இதே கருத்தை பின்வருகின்ற வசனமும் உறுதிப்படுத்துகிறது.

**ஆதாரம் 3**

قُلْ إِنَّمَا أَتَّبِعُ مَا يُوحَى إِلَيَّ مِنْ رَبِّي هَٰذَا بَصَائِرُ مِنْ رَبِّكُمْ وَهُدًى وَرَحْمَةٌ لِقَوْمٍ يُؤْمِنُونَ (٢٠٣)

நபியே! கூறுவீராக! நான் பின்பற்றுவதெல்லாம் என் இறைவனிடமிருந்து எனக்கு வஹ்யி அறிவிக்கப்படுவதைத்தான். இது உங்கள் இறைவனிடமிருந்து வந்த மிகத் தெளிவான ஆதாரங்களும் நேர்வழியும் நம்பிக்கை கொண்ட மக்களுக்கு (அல்லாஹ்வின்) கருணையும் ஆகும்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 7 அல்அஃராஃப் வசனம் : 203)

**ஆதாரம் 4**

وَاتَّبِعْ مَا يُوحَى إِلَيْكَ مِنْ رَبِّكَ إِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا (٢)

(நபியே!) உமது இறைவனிடமிருந்து உமக்கு வஹ்யி அறிவிக்கப்படுவதை நீர் பின்பற்றுவீராக! நிச்சயமாக நீங்கள் செய்வதை அல்லாஹ் ஆழ்ந்தறிபவனாக இருக்கின்றான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 33 சூரா அல்அஹ்ஸாப் வசனம் : 2)

ஆகவே, நபி ﷺ நமக்கு அல்லாஹ்வின் மார்க்கத்தில் கூறிய

அனைத்தும் உண்மை தான். அதில் பொய், தவறு, சுய கற்பனை கலப்பதற்கு வாய்ப்பு இல்லை.

இதையே பின் வரும் வசனமும் உறுதிப்படுத்துகிறது.

**ஆதாரம் 5**

**وَالنَّجْمِ إِذَا هَوَى (١) مَا ضَلَّ صَاحِبُكُمْ وَمَا غَوَى (٢) وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى (٣) إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحَى (٤)**

(சுரய்யா) நட்சத்திரத்தின் மீது சத்தியமாக, அது (அதிகாலையில்) விழும் போது, உங்கள் தோழர் வழி தவறவுமில்லை, வழி கெடவுமில்லை; மன இச்சையினால் அவர் பேசமாட்டார். இது (அவர் பேசுவது அவருக்கு) அறிவிக்கப்படுகின்ற வஹ்யே தவிர வேறு இல்லை.

(அல்குர்ஆன் அத்தியாயம் 53 சூரா அந்நஜ்ம் வசனம் : 1-4)

**ஆதாரம் 6**

**ثُمَّ جَعَلْنَاكَ عَلَى شَرِيعَةٍ مِنَ الْأَمْرِ فَاتَّبِعْهَا وَلَا تَتَّبِعْ أَهْوَاءَ الَّذِينَ لَا يَعْلَمُونَ (١٨)**

பிறகு, நாம் உம்மை இந்த மார்க்கத்தின் உறுதியான தெளிவான சட்டங்களில் அமைத்தோம். ஆகவே, அதையே நீர் பின்பற்றுவீராக! அறியாதவர்களின் மன விருப்பங்களை பின்பற்றாதீர்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 45 சூரா அல் ஜாஸியா வசனம் : 18)

நபி ﷺ கொண்டு வந்த மார்க்கம் அல்லாஹ்விடமிருந்து

அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஷரீஆ ஆகும். அதைத்தான் நபி ﷺ பின்பற்ற வேண்டும், பிற சமயத்தவர்களின் சட்டங்களை பின்பற்றக் கூடாது என்பது அல்லாஹ்வின் திட்டவட்டமான கட்டளையாகும். ஆகவே, நபி ﷺ கூறியவை, அவர்கள் செய்தவை அனைத்தும் உண்மையானவை. நாம் அவற்றை ஏற்க வேண்டும். இன்னும் அவற்றை பின்பற்ற வேண்டும்.

**ஆதாரம் 7**

مَنْ يُطِعِ الرَّسُولَ فَقَدْ أَطَاعَ اللّٰهَ

எவர் தூதருக்கு கீழ்ப்படிவாரோ அவர் திட்டமாக அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்து விட்டார்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 4 சூரா அன்னிசா வசனம் : 80)

**ஆதாரம் 8**

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللّٰهُ وَرَسُولُهُ أَمْرًا أَنْ يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَنْ يَعْصِ اللّٰهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُبِينًا (٣٦)

அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியத்தை முடிவு செய்து விட்டால், நம்பிக்கையுடைய ஆணுக்கும் நம்பிக்கையுடைய பெண்ணுக்கும் தங்களது காரியத்தில் அவர்களுக்கு என்று ஒரு விருப்பம் இருப்பது ஆகுமானதல்ல. எவர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறுசெய்வாரோ அவர் தெளிவாக வழிகெட்டுவிட்டார்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 33 சூரா அல்அஹ்ஸாப் வசனம் : 36)

**ஆதாரம் 9**

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَاللّٰهُ غَفُورٌ رَحِيمٌ (٣١) قُلْ أَطِيعُوا اللّٰهَ وَالرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكَافِرِينَ (٣٢)

(நபியே!) கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள்! அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன். (நபியே!) கூறுவீராக! அல்லாஹ்விற்கும் (அவனது) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்! நீங்கள் (கீழ்ப்படியாமல்) விலகிச் சென்றால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்களை நேசிக்க மாட்டான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 3 சூரா ஆலு இம்ரான் வசனம் : 31,32)

**ஆதாரம் 10**

وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانْتَهُوا وَاتَّقُوا اللّٰهَ إِنَّ اللّٰهَ شَدِيدُ الْعِقَابِ (٧)

தூதர் உங்களுக்கு எதை கொடுத்தாரோ அதைப் பற்றிப் பிடியுங்கள்! அவர் உங்களை எதை விட்டு தடுத்தாரோ (அதை விட்டு) விலகிவிடுங்கள்! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் கடுமையான தண்டனை உடையவன்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 59 சூரா அல்ஹஷ்ர் வசனம் : 7)

**ஆதாரம் 11**

أَمْ لَهُمْ شُرَكَاءُ شَرَعُوا لَهُمْ مِنَ الدِّينِ مَا لَمْ يَأْذَنْ بِهِ اللّٰهُ

(அல்லாஹ்வின்) மார்க்கத்தில் அல்லாஹ் எதை அனுமதிக்க வில்லையோ அதை இவர்களுக்கு சட்டமாக்குகின்ற இணை தெய்வங்களும் இவர்களுக்கு உண்டா?

(அல்குர்ஆன் அத்தியாயம் 42 சூரா அஷ்ஷூரா வசனம் : 21)

நபி ﷺ எதை நமக்கு சொல்லித் தந்தார்களோ, எதை நமக்கு கற்பித்தார்களோ அதுதான் அல்லாஹ் நமக்கு அனுமதித்தது. அவர்கள் கற்பிக்காத ஒன்று அல்லாஹ்வின் மார்க்கமாக, வழிபாடாக, சட்டமாக ஆகாது, அது எவ்வளவு அழகாக இருந்தாலும் சரியே! ஒருவர் அல்லாஹ்வும் தூதரும் கற்பிக்காத ஒன்றை மக்களுக்கு வழிபாடாக கற்பித்துக் கொடுத்தால் அவர் அல்லாஹ்வின் அதிகாரத்தில் தன்னை கூட்டாக்கிக் கொள்கிறார். அவ்வாறு கற்பிப்பவரை ஒருவர் பின்பற்றினால் அவர் அந்த நபரை அல்லாஹ்விற்குச் சமமாக - ஒரு கடவுளாக - ஆக்கிவிடுகிறார். அல்லாஹ் பாதுகாப்பானாக!

மேற்கண்ட வசனங்களின் வெளிச்சத்தில் நமது கல்விமான்கள் “முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதன் விளக்கத்தை நான்கு வாசகங்களில் மிக அழகாக நமக்கு விளக்கித் தந்துள்ளார்கள்.

அவை:

1. நபி ﷺ அவர்கள் கட்டளையிட்ட விஷயங்களில் அவர்களுக்குக் கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

2. அவர்கள் அறிவித்தவற்றில் அவர்களை உண்மைப்படுத்த வேண்டும்.

3. அவர்கள் தடுத்த செயல்களை விட்டு விலக வேண்டும்.

4. அவர்கள் காட்டிய வழியில் மட்டும் இறைவனை வணங்க வேண்டும்.

இக்கருத்திற்கு குர்ஆனிலும் ஸுன்னாவிலும் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன

---------------

# أَرْكَانُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ

# லா இலாஹ இல்லல்லாஹ் உடைய ருக்னுகள்

லா இலாஹ இல்லல்லாஹ்வில் இரண்டு ருக்னுகள் இருக்கின்றன.

'ருக்ன்' என்றால் உள் நிபந்தனை என்று பொருள். இது மிக மிக கட்டாயமானதும் மிக மிக அவசியமானதும் ஆகும்.

**முதல் வகை:** அதன் வார்த்தையைச் சார்ந்தது. அதில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. ஒன்று لا إلٰه லா இலாஹ, மற்றொன்று إلا الله இல்லல்லாஹ்.

**இரண்டாம் வகை:** அதன் பொருளைச் சார்ந்தது. அதற்குள் இரண்டு ருக்னுகள் உள்ளன.

**(அ)** அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகின்ற அனைத்தையும் மறுப்பது, அல்லாஹ் அல்லாத மற்றவர்களை விட்டும் வணக்க வழிபாட்டை மறுப்பது.

**(ஆ)** வணங்கத் தகுதியானவன் அல்லாஹ் ஒருவன்தான் என்று உறுதி கொள்வது. வணக்க வழிபாட்டை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே பரிசுத்தமாக்குவது.

இக்கலிமாவின் இந்த கருத்தை நாம் உறுதி கொள்ள வேண்டும்.

நம் எண்ணங்களையும் செயல்களையும் இதற்கு ஏற்ப மாற்ற வேண்டும். இதற்கு முரணானவற்றிலிருந்து உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும். இதையே பின்வரும் வசனத்தில் அல்லாஹ் தெளிவாகக் குறிப்பிடுகிறான்.

**فَمَنْ يَكْفُرْ بِالطَّاغُوتِ وَيُؤْمِنْ بِاللَّهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقَى لَا انْفِصَامَ لَهَا وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ (٢٥٦)**

ஆகவே, யார் தாகூத்தை (-அல்லாஹ் அல்லாத வணங்கப்படுகின்ற பொய்யானவற்றை-) மறுத்து, அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கிறாரோ அவர் மிக உறுதியான வளையத்தை இறுக்கமாக பிடித்துக் கொண்டார். அதற்கு துண்டிப்பே இல்லை. அல்லாஹ் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன் ஆவான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 2 சூரா அல்பகரா வசனம் : 256)

இமாம் தபரி ﵀ அவர்கள் தாகூத் என்ற பதத்திற்கு விளக்கம் கூறுகிறார்கள்: தாகூத் என்றால் அல்லாஹ்விற்கு எதிராக வணங்கப்படுகின்றவர்கள், ஒன்று தன்னை வணங்குகின்றவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வணங்க வைப்பது. அல்லது வணங்குகின்றவர்கள் தங்கள் சுய விருப்பத்துடன் அவர்களை வணங்குவது, வணங்கப்படுகின்றவர்களும் அதை மறுக்காமல் ஏற்றுக் கொள்வது.

மிக உறுதியான வளையம் என்றால் அல்லாஹ்வின் தண்டனையில் இருந்தும் வேதனையில் இருந்தும் தப்பிப்பதற்கு பற்றிப் பிடிக்கப்படுகின்ற விஷயங்களில் மிக உறுதியானதை அவர் எடுத்துக் கொண்டார்.

மேலும் இந்த வசனத்திற்கு இமாம் தபரி ﷀ இவ்வாறு விளக்கம் கூறுகிறார்கள்:

**فَتَأْوِيلُ الكَلَامِ إِذًا: فَمِنْ يَجْحَدُ رُبُوبِيَّةَ كُلِّ مَعْبُودٍ مِنْ دُونِ اللّٰهِ، فَيَكْفُرُ بِهِ وَيُؤْمِنُ بِاللّٰهِ يَقُولُ وَيُصَدِّقُ بِاللّٰهِ أَنَّهُ إِلٰهَهُ وَرَبُّهُ وَمَعْبُودُهُ فَقَدْ اِسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الوُثْقى**

அல்லாஹ்வை அன்றி வணங்கப்படுகின்ற அனைத்தின் கடவுள் தன்மையை யார் மறுத்து அதை நிராகரிப்பாரோ, மேலும் அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வாரோ அதாவது, அல்லாஹ்தான் எனது கடவுள், எனது வணக்கத்திற்குரிய இறைவன், எனது அதிபதி என்று உண்மையாக ஏற்றுக் கொள்வாரோ அவர் மிக உறுதியான வளையத்தை பற்றிப் பிடித்துக் கொண்டார்.

பின் வருகின்ற நபிமொழி இந்தக் கருத்தை தெளிவுபடுத்துகிறது.

**عَنْ أَبِي مَالِكٍ عَنْ أَبِيهِ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ مَنْ قَالَ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَكَفَرَ بِمَا يُعْبَدُ مَنْ دُونِ اللّٰهِ حَرُمَ مَالُهُ وَدَمُهُ وَحِسَابُهُ عَلَى اللّٰهِ.**

யார் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறி அல்லாஹ்வை அன்றி வணங்கப்படுகின்ற அனைத்தையும் நிராகரிப்பாரோ அவரின் செல்வமும் உயிரும் பாதுகாப்பு பெற்றுவிடும். அவரின் விசாரணை அல்லாஹ்விடம் இருக்கின்றது.

அறிவிப்பாளர்: தாரிக் இப்னு உஷைம் ﵁ | நூல்: ஸஹீஹ் முஸ்லிம் | எண்: 23.

இந்த ஹதீஸை அடிப்படையாக வைத்து இத்தூய திரு கலிமாவின் உண்மை நிலையை அடைவதற்கு இரண்டு விஷயங்கள் அவசியம்:

1. இதற்குரிய நிபந்தனைகள் இருக்க வேண்டும்.

2. இந்த சாட்சியத்திற்கு முரணான விஷயங்கள், இந்த சாட்சியத்திற்கு தடையான காரியங்கள் இருக்கக் கூடாது.

---------------------

# شُرُوطُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ

# லா இலாஹ இல்லல்லாஹ் உடைய ஷர்த்துகள் - நிபந்தனைகள்

**அவை ஏழு:**

**1. علم இல்மு - இந்த கலிமாவின் பொருளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது, மறுத்தல், உறுதிபடுத்துதல் என்று இரு பொருள்கள் இந்த கலிமாவில் உள்ளன.**

**மறுத்தல் என்றால் அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகின்ற அனைத்தையும் மறுப்பது.**

**உறுதிபடுத்துதல் என்றால் வணங்குவதற்குத் தகுதியானவன் அல்லாஹ் மட்டும்தான் என்று உறுதிபடுத்துவது.**

**ஆதாரம்**

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ

(நபியே!) நிச்சயமாக உண்மையில் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்பதை அறிந்து கொள்வீராக!”

(அல்குர்ஆன் அத்தியாயம் 47 சூரா முஹம்மது 19)

**2. يقين யகீன் - உறுதி கொள்வது. அதாவது இதில் சொல்லப்பட்ட கருத்தை முழுமனதுடன் மிக உறுதியாக அங்கீகரிப்பது. அதில் குழப்பமோ சந்தேகமோ இருப்பது கூடாது.**

**ஆதாரம்**

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرَسُولِهِ ثُمَّ لَمْ يَرْتَابُوا وَجَاهَدُوا بِأَمْوَالِهِمْ وَأَنْفُسِهِمْ فِي سَبِيلِ اللَّهِ أُولَئِكَ هُمُ الصَّادِقُونَ (١٥)

நம்பிக்கையாளர்கள் எல்லாம் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கை கொண்டு, பின்னர் சந்தேகம் கொள்ளாதவர்கள்தான். அவர்கள் அல்லாஹ்வுடைய வழியில் தங்கள் பொருள்களாலும், உயிர்களாலும் போர் செய்வார்கள். இவர்கள்தான் உண்மையாளர்கள்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 49 சூரா அல்ஹுஜுராத் வசனம்: 15)

சந்தேகமும், தடுமாற்றமும் இந்த நிபந்தனைக்கு முரண்பட்டதாகும்.

**3. إخلاص இக்லாஸ் - உளத்தூய்மை. அதாவது, இந்த சாட்சியத்திற்கு முரணானவற்றிலிருந்து உள்ளத்தை தூய்மைப்படுத்துவது. ஷிர்க் - இணைவைத்தலை விட்டு வணக்க வழிபாடுகளை தூய்மைப்படுத்துவது.**

**ஆதாரம்**

فَادْعُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ (١٤)

ஆகவே, அல்லாஹ்வை -அவனுக்கு வழிபாடுகளை

தூய்மைப்படுத்தியவர்களாக- அழையுங்கள்! நிராகரிப்பவர்கள் வெறுத்தாலும் சரியே!

(அல்குர்ஆன் அத்தியாயம் 40 சூரா அல்முஃமின் வசனம் 14)

இதற்கு நேர் எதிரானது “ஷிர்க்” என்ற இணைவைத்தல்.

**4. صدق ஸித்க் - ஏகத்துவத்தில் உள்ளும் புறமும் ஒன்றுபட்டு ஈமானை உண்மை என்று ஏற்க வேண்டும். இரண்டில் ஒன்று மற்றொன்றிற்கு முரண்படக் கூடாது. இதற்கு முரணானது كذب பொய் என்ற தன்மையாகும்.**

**ஆதாரம் 1**

لَيْسَ الْبِرَّ أَنْ تُوَلُّوا وُجُوهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَلَكِنَّ الْبِرَّ
مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَالْمَلَائِكَةِ وَالْكِتَابِ وَالنَّبِيِّينَ وَآتَى
الْمَالَ عَلَى حُبِّهِ ذَوِي الْقُرْبَى وَالْيَتَامَى وَالْمَسَاكِينَ وَابْنَ السَّبِيلِ
وَالسَّائِلِينَ وَفِي الرِّقَابِ وَأَقَامَ الصَّلَاةَ وَآتَى الزَّكَاةَ وَالْمُوفُونَ بِعَهْدِهِمْ
إِذَا عَاهَدُوا وَالصَّابِرِينَ فِي الْبَأْسَاءِ وَالضَّرَّاءِ وَحِينَ الْبَأْسِ أُولَئِكَ
الَّذِينَ صَدَقُوا وَأُولَئِكَ هُمُ الْمُتَّقُونَ (١٧٧)

உங்கள் முகங்களை கிழக்கின் பக்கம், மேற்கின் பக்கம் திருப்புவது நன்மை ஆகாது. மாறாக, எவர்கள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் வானவர்களையும் வேதங்களையும் நபிமார்களையும் நம்பிக்கை கொண்டார்களோ, இன்னும் செல்வத்தை அதன் விருப்பம் இருப்பதுடன் உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும்

ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் யாசகர்களுக்கும் அடிமைகளை உரிமையிடுவதற்கும் கொடுத்தார்களோ, இன்னும் தொழுகையை நிலை நிறுத்தி ஸகாத்தை கொடுத்தார்களோ, இன்னும் தாங்கள் ஒப்பந்தம் செய்தால் தங்கள் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவார்களோ, இன்னும் வறுமை காலங்களிலும் நோய் காலங்களிலும் போர் சமயத்திலும் பொறுமையாக இருந்தார்களோ அவர்கள்தான் நன்மை உடையவர்கள். அவர்கள்தான் உண்மையாளர்கள். அவர்கள்தான் தக்வா -இறையச்சம் உள்ளவர்கள்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 2 சூரா அல்பகரா வசனம் 177)

இந்த வசனத்தில் கொள்கையும் சொல்லும் செயலும் சரியாக இருப்பவர்களைத்தான் அல்லாஹ் உண்மையான முஃமின்கள் என்று ஏற்றுக் கொள்கிறான்.

**ஆதாரம் 2**

إِذَا جَاءَكَ الْمُنَافِقُونَ قَالُوا نَشْهَدُ إِنَّكَ لَرَسُولُ اللَّهِ وَاللَّهُ يَعْلَمُ إِنَّكَ لَرَسُولُهُ وَاللَّهُ يَشْهَدُ إِنَّ الْمُنَافِقِينَ لَكَاذِبُونَ (١)

(நபியே!) நயவஞ்சகர்கள் உம்மிடம் வந்தால், நிச்சயமாக நீர் அல்லாஹ்வுடைய தூதர்தான் என்று நாங்கள் சாட்சி கூறுகிறோம் என்று கூறுகிறார்கள். நிச்சயமாக நீர் தனது தூதர்தான் என்பதை அல்லாஹ் நன்கறிவான். நிச்சயமாக நயவஞ்சகர்கள் பொய்யர்கள்தான் என்று அல்லாஹ் சாட்சி கூறுகிறான்!

(அல்குர்ஆன் அத்தியாயம் 63 சூரா அல்முனாஃபிகூன் வசனம் 1)

இந்த வசனம் வழிகெட்ட நயவஞ்சகர்களின் நிராகரிப்பை தெளிவுபடுத்துகிறது. ஏனெனில், அவர்கள் நாவால் முஹம்மது ﷺ அவர்களை நபி என்று கூறினாலும் அவர்களது உள்ளங்களில்

அந்த நம்பிக்கை இருப்பதில்லை. உள்ளத்தில் இல்லாமல் நாவால் மட்டும் கூறுவதை பொய் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே, ஒரு முஃமின் - நம்பிக்கையாளரிடம் உள்ளமும் நாவும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும். நாவு சொல்வதை உள்ளமும் ஏற்க வேண்டும். உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்துவதற்குத்தான் நாவு. உள்ளத்தில் நிராகரிப்பை வைத்துக் கொண்டு நாவால் நம்பிக்கையை வெளிப்படுத்துபவர் நிராகரிப்பாளர்களில் நயவஞ்சகர் என்ற வகையை சேர்ந்தவர் ஆவார். நயவஞ்சகம் மிகக் கடுமையான நிராகரிப்பாகும். ஆகவேதான் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

**إِنَّ الْمُنَافِقِينَ فِي الدَّرْكِ الْأَسْفَلِ مِنَ النَّارِ وَلَنْ تَجِدَ لَهُمْ نَصِيرًا (١٤٥)**

நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகத்தில் மிகத் தாழ்ந்த தளத்தில் இருப்பார்கள். அவர்களுக்கு உதவி செய்பவரை நீர் காணவே மாட்டீர்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 4 சூரா அன்னிசா வசனம் 145)

**5. محبة முஹப்பத்** - அல்லாஹ்வை முழுமையாக நேசிக்க வேண்டும். அவனது தூதர், அவனது மார்க்கம், அவனது மார்க்கத்தை நம்பிக்கை கொண்ட முஃமின்கள் அனைவரிடமும் அன்பு கொள்ள வேண்டும். இதற்கு எதிரானது **بغض** வெறுப்பு, **غضب** கோபம் ஆகும்.

**ஆதாரம் 1**

**وَمِنَ النَّاسِ مَنْ يَتَّخِذُ مِنْ دُونِ اللهِ أَنْدَادًا يُحِبُّونَهُمْ كَحُبِّ اللهِ وَالَّذِينَ آمَنُوا أَشَدُّ حُبًّا لِلَّهِ**

மேலும் அல்லாஹ் அல்லாதவற்றை (அவனுக்கு) இணைகளாக எடுத்துக் கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பது போல அவற்றை நேசிப்பவர்களும் மனிதர்களில் இருக்கின்றனர். எனினும், நம்பிக்கையாளர்கள் (இவர்களைவிட) அதிகமாக அல்லாஹ்வை நேசிப்பார்கள்."

(அல்குர்ஆன் அத்தியாயம் 2 சூரா அல்பகரா வசனம் 165)

**ஆதாரம் 2**

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا مَنْ يَرْتَدَّ مِنْكُمْ عَنْ دِينِهِ فَسَوْفَ يَأْتِي اللَّهُ بِقَوْمٍ يُحِبُّهُمْ وَيُحِبُّونَهُ

நம்பிக்கையாளர்களே! உங்களில் எவரேனும் தமது மார்க்கத்தில் இருந்து மாறிவிட்டால் (உங்களைப் போக்கிவிட்டு) வேறு மக்களை அல்லாஹ் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான். அவர்களும் அவனை நேசிப்பார்கள்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 5 அல்மாயிதா வசனம் 54)

**ஆதாரம் 3**

قُلْ إِنْ كَانَ آبَاؤُكُمْ وَأَبْنَاؤُكُمْ وَإِخْوَانُكُمْ وَأَزْوَاجُكُمْ وَعَشِيرَتُكُمْ وَأَمْوَالٌ اقْتَرَفْتُمُوهَا وَتِجَارَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسَاكِنُ تَرْضَوْنَهَا أَحَبَّ إِلَيْكُمْ مِنَ اللَّهِ وَرَسُولِهِ وَجِهَادٍ فِي سَبِيلِهِ فَتَرَبَّصُوا حَتَّى يَأْتِيَ اللَّهُ بِأَمْرِهِ وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الْفَاسِقِينَ (٢٤)

(நபியே!) கூறுவீராக! உங்கள் பெற்றோர்கள், உங்கள் பிள்ளைகள், உங்கள் சகோதரர்கள், உங்கள் மனைவிகள்,

உங்கள் குடும்பத்தினர், நீங்கள் சேர்த்துவைத்த செல்வங்கள், மந்தமாகிவிடுவதை நீங்கள் பயப்படுகின்ற வியாபாரம், நீங்கள் விரும்புகின்ற இல்லங்கள் அல்லாஹ்வை விடவும் அவனது தூதரை விடவும் அவனுடைய பாதையில் போர் புரிவதைவிடவும் உங்களுக்கு மிக விருப்பமாக இருந்தால் அல்லாஹ் தனது கட்டளையை (-வேதனையை) கொண்டுவருகின்ற வரை எதிர் பார்த்து இருங்கள்! அல்லாஹ் பாவிகளான மக்களை நேர்வழி செலுத்த மாட்டான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 9 சூரா அத்தவ்பா வசனம் 24)

**6. قبول கபூல் -** ஏற்றுக்கொள்வது: அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கூறியிருப்பதை மனமுவந்து விருப்பத்துடன் அதுதான் வெற்றிக்கு வழி; அதுதான் நேர்வழி என ஏற்றுக் கொள்வது. இதற்கு எதிரானது **رد** மறுப்பது, **إعراض** புறக்கணிப்பது.

**ஆதாரம் 1**

**إِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِينَ إِذَا دُعُوا إِلَى اللَّهِ وَرَسُولِهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ أَنْ يَقُولُوا سَمِعْنَا وَأَطَعْنَا وَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ (٥١) وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ وَيَخْشَ اللَّهَ وَيَتَّقْهِ فَأُولَئِكَ هُمُ الْفَائِزُونَ (٥٢)**

எனினும், மெய்யாகவே நம்பிக்கை கொண்டவர்களோ அவர்களுக்கு இடையில் (ஏற்பட்ட விவகாரத்தைப் பற்றித்) தீர்ப்பு பெற அல்லாஹ்விடமும், அவனுடைய தூதரிடமும் வரும்படி அழைக்கப்பட்டால், அதற்கவர்கள் “நாங்கள் செவி சாய்த்தோம்; நாங்கள் கீழ்ப்படிந்தோம்'' என்று கூறுவதைத் தவிர, வேறு ஒன்றும் கூறுவதில்லை. இவர்கள்தான் முற்றிலும்

வெற்றி அடைந்தவர்கள் ஆவர். எவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு, அல்லாஹ்வுக்குப் பயந்து (அவனுக்கு மாறு செய்வதை விட்டு) விலகி அவனை அஞ்சிக் கொண்டார்களோ அவர்கள்தான் நிச்சயமாக பெரும் பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 24 சூரா அந்நூர் வசனம் 51, 52)

**ஆதாரம் 2**

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللَّهُ وَرَسُولُهُ أَمْرًا أَنْ يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَنْ يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُبِينًا (٣٦)

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றிக் கட்டளையிட்டால், அந்த விஷயத்தில் (அதனை விட்டு) வேறு விருப்பம் கொள்வதற்கு நம்பிக்கை கொண்ட ஆணுக்கும் நம்பிக்கை கொண்ட பெண்ணுக்கும் உரிமையில்லை. (இவ்விஷயத்தில்) அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் மாறு செய்வாரோ அவர் திட்டமாக மிகத் தெளிவான வழிகேட்டில் வழிகெட்டுவிட்டார்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 33 சூரா அல்அஹ்ஸாப் வசனம் 36)

அல்லாஹ்வும் ரசூலும் ஒன்றை கட்டளையிட்டால் அதுதான் அவர்களின் விருப்பம் ஆகும். ஆகவே, அவர்களின் விருப்பத்தைத்தான் ஒரு முஸ்லிம் தனது மனதில் ஏற்க வேண்டும். அதை விட்டு விட்டு வேறு ஒன்றை மனதில் வைப்பதும் அதை விரும்புவதும் அவரை ஈமானின் வட்டத்தை விட்டு வெளியேற்றி விடும்.

இதற்கு நேர் எதிரானது, உள்ளத்தால் இம்மார்க்கத்தை மறுப்பது.

**ஆதாரம் 3**

وَمَنْ يُعْرِضْ عَنْ ذِكْرِ رَبِّهِ يَسْلُكْهُ عَذَابًا صَعَدًا (١٧)

எவர் தன் இறைவனின் அறிவுரையை புறக்கணிப்பாரோ அவரை அவன் கடினமான வேதனையில் புகுத்துவான்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 72 சூரா அல்ஜின்னு வசனம் 17)

**ஆதாரம் 4**

وَقَدْ آتَيْنَاكَ مِنْ لَدُنَّا ذِكْرًا (٩٩) مَنْ أَعْرَضَ عَنْهُ فَإِنَّهُ يَحْمِلُ يَوْمَ الْقِيَامَةِ وِزْرًا (١٠٠) خَالِدِينَ فِيهِ وَسَاءَ لَهُمْ يَوْمَ الْقِيَامَةِ حِمْلًا (١٠١)

திட்டமாக நாம் உமக்கு ஓர் அறிவுரையைக் கொடுத்தோம். எவர்கள் அதை புறக்கணிப்பார்களோ நிச்சயமாக அவர்கள் மறுமை நாளில் பெரும் பாவத்தைத்தான் சுமப்பார்கள். அவர்கள் அதில் நிரந்தரமாக இருப்பார்கள். மறுமை நாளில் அவர்களுக்கு அது மிகத் தீமையான சுமையாக இருக்கும்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 20 சூரா தாஹா வசனம் 99,100,101)

**ஆதாரம் 5**

وَيَقُولُونَ آمَنَّا بِاللَّهِ وَبِالرَّسُولِ وَأَطَعْنَا ثُمَّ يَتَوَلَّى فَرِيقٌ مِنْهُمْ مِنْ بَعْدِ ذَلِكَ وَمَا أُولَئِكَ بِالْمُؤْمِنِينَ (٤٧) وَإِذَا دُعُوا إِلَى اللَّهِ وَرَسُولِهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ إِذَا فَرِيقٌ مِنْهُمْ مُعْرِضُونَ (٤٨)

“நாங்கள் அல்லாஹ்வையும் தூதரையும் நம்பிக்கை

கொண்டோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். பிறகு, இதற்கு பின்னர் அவர்களில் இரு பிரிவினர் விலகிவிடுகின்றனர். அவர்கள் முஃமின்கள் - நம்பிக்கையாளர்கள் இல்லை. அல்லாஹ்வின் பக்கமும் அவனது தூதரின் பக்கமும் அவர்கள் அழைக்கப்பட்டால் - அவர்களுக்கு மத்தியில் அல்லாஹ்வும் தூதரும் தீர்ப்பளிப்பதற்காக - அப்போது அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணிக்கின்றனர்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 24 சூரா அந்நூர் வசனம் 47,48)

**(إِذَا فَرِيقٌ مِنْهُمْ مُعْرِضُونَ) عَنْ قُبُولِ الحَقِّ، وَالرِّضَا بِحُكْمِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ.**

இந்த வசனத்திற்கு இமாம் தபரி ﷀ விளக்கம் கூறுகிறார்கள்: அதாவது "உண்மையை ஏற்றுக் கொள்வதை விட்டும் அல்லாஹ்வுடைய தூதரின் தீர்ப்பைக் கொண்டு திருப்தி அடைவதை விட்டும் அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணிக்கின்றனர்."

இப்படிப்பட்டவர்களின் ஈமானை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் தங்களைத் தாமே முஃமின்கள் என்று சொல்லிக் கொண்டாலும் அல்லாஹ்விடத்தில் இவர்கள் முஃமின்கள் இல்லை. ஆகவே, மனதால் 'கபூல்' -ஏற்றுக் கொள்வது இல்லாமல் ஈமான் கொண்டோம் என்று நாவால் சொல்வது மட்டும் ஒருவரை முஃமினாக ஆக்கிவிடாது.

**7. انقياد இன்கியாத்** - கட்டுப்படுதல்: அல்லாஹ்வுக்கும் அவனது ரசூலுக்கும் கீழ்ப்படிதல், கட்டுப்படுதல் வேண்டும். அதாவது வாயால் சொல்வதுடனும் மனதால் ஏற்றுக்கொள்வதுடனும்

மட்டும் நிறுத்திவிடாமல் செயலால் நல்ல அமல்கள் மூலம் நமது நம்பிக்கையை உறுதிபடுத்தவேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளையும் நபி ﷺ அவர்களின் ஸுன்னாவையும் முடிந்த அளவு செயல்படுத்தவேண்டும். **فرض** ஃபர்ழ்கள் கட்டாயக் கடமைகள் | **واجب** கடமைகள் | **سنة** சுன்னத்துகள் விரும்பத்தக்க நல்லறங்கள் என ஒவ்வொன்றையும் அவற்றின் படித்தரங்களுக்கு ஏற்ப செயல்படுத்த வேண்டும். அல்லாஹ் உடைய கட்டளைகளையும் அவனது ரசூலுடைய கட்டளைகளையும் ஏற்று செயல்படுத்த வேண்டும். அல்லாஹ்வும் அவனது ரசூலும் தடுத்த விஷயங்கள் அனைத்தையும் விட்டும் விலகி இருக்க வேண்டும். இதைத்தான் பின்வருகின்ற ஆதாரங்கள் உறுதிபடுத்துகின்றன.

**ஆதாரம் 1**

إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّهُ ثُمَّ اسْتَقَامُوا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ (١٣) أُولَئِكَ أَصْحَابُ الْجَنَّةِ خَالِدِينَ فِيهَا جَزَاءً بِمَا كَانُوا يَعْمَلُونَ (١٤)

நிச்சயமாக எவர்கள் எங்கள் இறைவன் அல்லாஹ்தான் என்று கூறினார்களோ, பிறகு, (அதில்) நிலையாக இருந்தார்களோ அவர்கள் மீது பயமில்லை, அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். அவர்கள்தான் சொர்க்கவாசிகள். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். இது அவர்கள் செய்து கொண்டிருந்ததற்கு கூலியாகும்.

(அல்குர்ஆன் அத்தியாயம் 46 சூரா அல்அஹ்காஃப் வசனம் 13,14)

இந்த வசனத்திற்கு இமாம் தபரி ؒ விளக்கம் கூறுகிறார்கள்:

(ثُمَّ اسْتَقَامُوا) عَلَى تَصْدِيقِهِمْ بِذٰلِكَ فَلَمْ يَخْلِطُوهُ بِشَرْكٍ، وَلَمْ يُخَالِفُوا اللّٰهَ فِي أَمْرِهِ وَنَهْيِهِ

“பிறகு நிலையாக இருந்தார்கள்” அதாவது தாங்கள் உண்மை என்று ஏற்றுக்கொண்ட அந்த தூய திரு கலிமாவின் மீது உறுதியாக இருந்து தங்கள் நம்பிக்கையில் ஷிர்க் - இணை வைத்தலை அவர்கள் கலக்கவில்லை. இன்னும், அவனது கட்டளைகளிலும் அவனது தடைகளிலும் அவர்கள் அவனுக்கு மாறு செய்யவில்லை.

மேலும் கூறுகிறார்கள்:

(جَزَاءً بِمَا كَانُوا يَعْمَلُونَ) يَقُولُ: ثَوَابًا مِنَّا لَهُمْ آتَيْنَاهُمْ ذٰلِكَ عَلَى أَعْمَالِهِمْ الصَّالِحَةِ الَّتِي كَانُوا فِي الدُّنْيَا يَعْمَلُونَهَا.

“இது அவர்கள் செய்து கொண்டிருந்ததற்கு கூலியாகும்.” அதாவது இது நம் புறத்திலிருந்து அவர்களுக்கு நாம் கொடுத்த நற்கூலியாகும். அவர்கள் உலக வாழ்க்கையில் செய்து கொண்டிருந்த நல்ல அமல்களுக்கு கூலியாக நாம் இதை அவர்களுக்குக் கொடுத்தோம்.

சொல் மட்டும் போதாது, அல்லது வெறும் உள்ளத்தால் நம்புவது மட்டும் போதாது என்பதை இந்த வசனங்கள் மிக அழகாக தெளிவுபடுத்துகின்றன. கொள்கையில் உறுதியாக இருப்பது என்றால் அது மார்க்கக் கட்டளைகளுக்கும் விலக்கல்களுக்கும் கீழ்ப்படிவதன் மூலம்தான் நிலை பெறும் என்பதை இந்த வசனம் ஆழமாக உணர்த்துகின்றது.

## ஆதாரம் 2

آمَنَ الرَّسُولُ بِمَا أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالْمُؤْمِنُونَ كُلٌّ آمَنَ بِاللَّهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لَا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ وَقَالُوا سَمِعْنَا وَأَطَعْنَا غُفْرَانَكَ رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيرُ (٢٨٥)

ரசூல் தமக்கு தமது இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதை நம்பிக்கை கொண்டார். இன்னும் முஃமின்களும் நம்பிக்கை கொண்டனர். எல்லோரும் அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் அவனது வேதங்களையும் அவனது ரசூல்களையும் நம்பிக்கை கொண்டனர். அவனது தூதர்களில் எந்த ஒருவருக்கிடையிலும் நாம் பிரிவினை காட்ட மாட்டோம். இன்னும் அவர்கள் கூறுவார்கள், “நாங்கள் செவியுற்றோம்; நாங்கள் கீழ்ப்படிந்தோம்; நீ எங்களை மன்னிப்பாயாக எங்கள் இறைவா! உன்னிடமே (எங்கள்) மீளுமிடம் இருக்கின்றது.”

(அல்குர்ஆன் அத்தியாயம் 2 சூரா அல்பகரா வசனம் 285)

இமாம் தபரி ﵀ இந்த வசனத்திற்கு விளக்கம் கூறுகிறார்கள்:

«بِمَا أُنْزِلُ إِلَيْهِ»، يَعْنِي: بِمَا أُوْحِيَ إِلَيْهِ مِنْ رَبِّهِ مِنَ الْكِتَابِ، وَمَا فِيهِ مِنْ حَلَالٍ وَحَرَامٍ، وَوَعْدٍ وَعِيدٍ، وَأَمْرٍ وَنَهْيٍ، وَغَيْرِ ذَلِكَ مِنْ سَائِرِ مَا فِيهِ مِنَ الْمَعَانِي الَّتِي حَوَاهَا.

“தமக்கு தன் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதை” அதாவது வேதத்தில் । மார்க்கத்தில் தனது இறைவனிடமிருந்து தமக்கு வஹ்யி அறிவிக்கப்பட்டதையும் அதில் உள்ள ஹலால்

-ஆகுமானதையும், ஹராம் -ஆகாதவற்றையும் வாக்குகளையும் எச்சரிக்கைகளையும் ஏவல்களையும் விலக்கல்களையும் இன்னும் இந்த வேதம் தனக்குள் வைத்துள்ள இவை அல்லாத மற்ற எல்லா விஷயங்களையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அதாவது **قبول** -கபூல் உள்ளத்தால் ஏற்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

**وَقَالَ الكُلُّ مِنَ الْمُؤْمِنِينَ: «سَمِعْنَا» قَوْلَ رَبِّنَا وَأَمْرَهُ إِيَّانَا بِمَا أَمَرَنَا بِهِ، وَنَهْيَهُ عَمَّا نَهَانَا عَنْهُ = «وَأَطَعْنَا»، يَعْنِي: أَطَعْنَا رَبَّنَا فِيمَا أَلْزَمَنَا مِنْ فَرَائِضِهِ، وَاسْتَعْبَدَنَا بِهِ مِنْ طَاعَتِهِ، وَسَلَّمْنَا لَهُ**

“நாங்கள் செவியுற்றோம்; நாங்கள் கீழ்ப்படிந்தோம்.”

“நாங்கள் செவியுற்றோம்” அதாவது, முஃமின்களில் எல்லோரும் கூறுவார்கள்: “நாங்கள் எங்கள் இறைவனின் கூற்றையும் அவன் எங்களுக்கு எதை கட்டளையிட்டானோ அந்த கட்டளைகளையும், அவன் எதை விட்டும் எங்களை தடுத்தானோ அந்த விலக்கல்களையும் தடைகளையும் நாங்கள் (எங்கள் செவிகளால்) செவியுற்றோம்.

“நாங்கள் கீழ்ப்படிந்தோம்” அதாவது எங்கள் இறைவன் எங்கள் மீது அவனுக்குரிய ஃபர்ழுகள் - கட்டாயக் கடமைகளை கடமையாக்கியதில், இன்னும் அவனுடைய வழிபாடுகளில் நாங்கள் அவனை வணங்கவேண்டும் என்று கூறிய விஷயங்களில் நாங்கள் அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்போம்; முற்றிலும் ஏற்று பணிந்து நடப்போம்.

**انقياد** கட்டுப்படுதல் என்ற தன்மைக்கு நேர் எதிரானது எதுவெனில், மார்க்க வழிகாட்டல்படி அமல் செய்யாமல் விட்டு

விடுவதும், மார்க்கத்திற்கு மாற்றமாக நடப்பதும், மார்க்கச் சட்டங்களை மீறுவதும் ஆகும்.

ஒருவர் எல்லா விஷயங்களிலும் மன முரண்டாக மார்க்கத்தைப் புறக்கணித்து வந்தால், மார்க்கச் சட்டங்களை மீறி வந்தால், ஏவல் விலக்கல்களை கவனிக்கவில்லை என்றால் அவர் கண்டிப்பாக மார்க்கத்தை விட்டு ஒரு நாள் வெளியேறி விடுவார்.

**ஆதாரம் 3**

تِلْكَ حُدُودُ اللّٰهِ وَمَنْ يُطِعِ اللّٰهَ وَرَسُولَهُ يُدْخِلْهُ جَنَّاتٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا وَذَلِكَ الْفَوْزُ الْعَظِيمُ (١٣) وَمَنْ يَعْصِ اللّٰهَ وَرَسُولَهُ وَيَتَعَدَّ حُدُودَهُ يُدْخِلْهُ نَارًا خَالِدًا فِيهَا وَلَهُ عَذَابٌ مُهِينٌ (١٤)

இவை அல்லாஹ்வின் சட்ட வரம்புகளாகும். யார் அல்லாஹ்விற்கும் அவனது ரசூலுக்கும் கீழ்ப்படிவார்களோ அவன் அவர்களை சொர்க்கங்களில் பிரவேசிக்கச் செய்வான். அவற்றின் கீழ் நதிகள் ஓடும். அவர்கள் அதில் நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். இதுதான் மகத்தான நற்பாக்கியமாகும். யார் அல்லாஹ்விற்கும் அவனது ரசூலுக்கும் மாறு செய்வாரோ, அவனுடைய சட்ட வரம்புகளை மீறுவாரோ அவரை அவன் நரகத்தில் பிரவேசிக்கச் செய்வான். அதில் அவன் நிரந்தரமாக தங்கி இருப்பான். அவனுக்கு இழிவுதரும் வேதனை (அதில்) உண்டு.

(அல்குர்ஆன் அத்தியாயம் 4 சூரா அந்நிசா வசனம் 13,14)

இமாம் தபரி ﵀ கூறுகிறார்கள்: “இந்த வசனம் சொத்துரிமைச் சட்டங்களுக்குப் பின்னர் கூறப்பட்டிருந்தாலும் அது தொடர்பான

சட்டங்களுக்கும் மற்றும் அது அல்லாத எல்லா சட்டங்களுக்கும் பொதுவானதுதான். யார் அல்லாஹ்வின் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல், அவற்றுக்குக் கட்டுப்படாமல் அவற்றை எதிர்ப்பாரோ, அவற்றில் சந்தேகப்படுவாரோ, அவற்றில் முரண்படுவாரோ அவர் மார்க்கத்தை விட்டு வெளியேறியவராக அல்லாஹ்வை நிராகரித்தவராக மாறிவிடுவார்.

**ஆதாரம் 4**

**فَلْيَحْذَرِ الَّذِينَ يُخَالِفُونَ عَنْ أَمْرِهِ أَنْ تُصِيبَهُمْ فِتْنَةٌ أَوْ يُصِيبَهُمْ عَذَابٌ أَلِيمٌ (٦٣)**

ஆகவே, எவர்கள் (தூதராகிய) அவருடைய கட்டளையைப் புறக்கணிப்பார்களோ அவர்கள் தங்களுக்கு ஒரு சோதனை ஏற்படுவதை அல்லது தங்களுக்கு வலிமிகுந்த வேதனை வந்தடைவதை பயந்து கொள்வார்களாக.

(அல்குர்ஆன் அத்தியாயம் 24 சூரா அந்நூர் வசனம் 63)

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள **فتنة** ஃபித்னா சோதனை என்பதற்கு **كفر** குஃப்ர் இறை நிராகரிப்பு என்று இமாம் இப்னு ஸைது கூறுவதாக இமாம் தபரி ﵀ பதிவு செய்துள்ளார்கள்.

ஆம், ஒருவர் அல்லாஹ் இன்னும் அவனுடைய ரசூலின் கட்டளைக்கு எப்போதும் மாறு செய்து கொண்டே இருந்தால் அது அவரை புறக்கணிப்பின் பக்கம் தள்ளிவிடும். புறக்கணிப்பு இறை நிராகரிப்பின் பக்கம் தள்ளிவிடும்.

-------------------------------

# نَوَاقِضُ الشَّهَادَةِ

## ஈமானின் சாட்சியத்தை முறிப்பவை

ஒருவர் தவ்ஹீதின் சாட்சியத்தை மொழிந்து விட்டால் அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் நுழைந்து விட்டார். பிறகு அவர் அதன் பொருளை உணர வேண்டும். அதன் ருக்னுகளையும் ஷர்த்துகளையும் கற்று அவற்றின்படி நடக்க வேண்டும். இந்த சாட்சியத்தின் ருக்னுகள் மற்றும் ஷர்த்துகளுக்கு முரண்பட்டவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும். தவ்ஹீதின் சாட்சியத்தை முறித்து விடுகின்ற நாசகாரச் செயல்களை விட்டு அவன் தூரமாக இருக்க வேண்டும். அப்படி விலகாவிட்டால் அவன் இஸ்லாமிய வட்டத்திற்குள் இருக்க மாட்டான். **مرتد** முர்தத் -மார்க்கத்தை விட்டு மதம் மாறியவனாக ஆகிவிடுவான்.

**சாட்சியத்தை முறிப்பவை:**

1. ஷஹாதாவின் பொருளையும் கருத்தையும் தெரியாமல் இருப்பது. சாட்சியத்தின் வாசகத்தைப் புரியாமல், விளங்காமல் இருப்பது.
2. இதன் ஷர்த்துகளில் சந்தேகப்படுவது.
3. அல்லாஹ்வுக்கு இணைவைப்பது.
4. பொய் - அதாவது நாவால் ஈமானை வெளிப்படுத்தி உள்ளத்தில் குஃப்ரை மறைப்பது.

5. அல்லாஹ்வை அல்லது ரசூலை அல்லது மார்க்கத்தை வெறுப்பது இன்னும் கோபிப்பது. முஃமின்களிடம் பகைமை காட்டி காஃபிர்களை நேசிப்பது.

6. அல்லாஹ் இன்னும் அவனது தூதரின் கட்டளைகளை புறக்கணிப்பது, அவற்றை ஏற்க மறுப்பது.

7. அல்லாஹ் இன்னும் ரசூலுடைய கட்டளைகள் அனைத்தையும் முற்றிலும் விட்டுவிடுவது, மார்க்கத்தை முழுவதுமாக ஒதுக்கி விடுவது, மார்க்க சட்டங்களில் ஃபர்ழுகளை அறவே செய்யாமல் இருப்பது.

## சாட்சியத்தை முறிக்கின்ற செயல்களில் அதிகம் நிகழ்பவை

1. இணைவைப்பது.

2. அல்லாஹ்வைத் தவிர பரிந்துரையாளர்களை உண்டாக்குவது, அவனுக்கும் நமக்கும் இடையே மனிதர்களை இடைத் தரகர்களாக ஏற்படுத்துவது.

2. இணைவைப்பவர்களைக் காஃபிர் என்று சொல்லாமல் இருப்பது. அல்லது அவர்கள் காஃபிர்கள் என்பதில் சந்தேகப்படுவது. அல்லது அவர்களது வழியை சரி என்று சொல்வது.

4. பிற மனிதனின் வழிமுறைகளை நபி ﷺ அவர்களின் வழிமுறையைவிடச் சிறந்ததாக அல்லது அதற்கு சமமானதாகக் கருதுவது.

5. நபி ﷺ அவர்களை அல்லது அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை வெறுப்பது.

6. அல்லாஹ்வின் வேதத்தையோ நபி ﷺ அவர்களையோ அவர்களின் சுன்னத்துகளையோ கேலி கிண்டல் செய்வது.

7. இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வெளியேறுவது சிலருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என நம்புவது.

8. பில்லி, சூனியம், செய்வினை செய்வது. ஜோசியம், ராசி பலன் பார்ப்பது.

9. மார்க்கத்திற்கு எதிராக இணைவைப்போருக்கு உதவி ஒத்தாசை புரிவது. அவர்களுடன் உள்ளத்தால் தோழமை கொள்வது.

10. மார்க்கம் என்றால் என்னவென்று தெரியாமலும் மார்க்கத்தை அறவே கற்காமலும், மார்க்கத்தின் படி அறவே அமல் செய்யாமலும் மார்க்கத்தைப் புறக்கணித்து வாழ்வது.

---------------------